பள்ளிக் கல்வித்துறை

சேலம் மாவட்டம்

மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# வரலாறு

# வினா - விடை - வங்கி

## 2012 - 2013

JAIRAM COLLEGE

வெளியீடு

முதன்மைக் கல்வி அலுவலர்

சேலம்

## பயிற்சி - முயற்சி - வெற்றி

***அன்பான மாணவ செல்வங்களே!***

பனிரெண்டாம் வகுப்பு வரலாறு பாடத்தில் ஒரு மதிப்பெண், மூன்று மதிப்பெண் ஆறு, மதிப்பெண், பத்து மதிப்பெண் வினாவிற்கான விடைகள் மிக எளிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைவரும் தேர்வில் வெற்றி பெறும் நோக்கத்தில் இவ்வினா- விடை வங்கி கொடுக்கப்பட்டு உள்ளது. மாணவர்கள் இதனை சரியான முறையில் படித்து வெற்றி பெற வாழ்த்துக்கள்.

வரலாறு படிப்போம் ! வரலாறு படைப்போம் ! **வரலாறு**


A.சரஸ்வதி, MA.MEd.Mphil
அ. ஆ.மே.நி.பள்ளி, சங்ககிரி

K.ராஜேந்திர சோழன், Bsc.BEd.MA.Mphil
செங்குந்தர் மகாஜன மேல்நிலைப் பள்ளி, தாரமங்கலம்.

P.அருணாசலம், MA.Mphil.BEd
வைத்தீஸ்வரா மேல்நிலைப்பள்ளி, மேட்டூர் அணை -2

S. சரளா MA.BEd.Mphil
அ.மே.நி.பள்ளி. வனவாசி

E.பிரேமாமேரி ராணி MA.Bed.
CSI ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சேலம் -1

V.கணேசன்,MA.B.Ed.
அ.மே.நி.பள்ளி.வேம்படிதாளம்

D.ஜெயவேல்,MA.B.Ed.
அ.மே.நி.பள்ளி. ஏத்தாப்பூர்.

S.சுகுமார்,MA.M.Phil.BEd
அ.மே.நி. பள்ளி, வலசையூர்.


| **வினா வகை** | | **மதிப்பெண்** |
|---|---|---|
| I. | 1. சரியான விடையைத் தேர்ந்தெடு | 20X1 = 20 |
| | 2. கோடிட்ட இடம் | 10X1 = 10 |
| | 3. பொருத்துக | 05X01 = 05 |
| | 4. சரியான குறிப்பைக் கண்டறிக | 5X1 = 5 |
| | 5. சரியா, தவறா? | 5X1 = 5 |
| | | 45 |
| II. | குறிப்பு வரைக | 15X3 = 45 |
| III. | 100 வார்த்தையில் விடையளி | 10X6 = 60 |
| IV. | 200 வார்த்தையில் விடையளி | 5X10 = 50 |
| | மொத்தம் | **200** |

JAIRAM COLLEGE

âU. ïuh.<°tu‹, M.A.,M.Ed.,
Kj‹ik¡ fšÉ mYty®,
nry« kht£l«.

# thœ¤J klš

Ka‰á âUÉid M¡F« Ka‰Wï‹ik
ï‹ik òF¤â ÉL« - âUtŸSt®

ï¡fšÉah©oš nry« kht£l¤âYŸs mid¤J nkšÃiy¥gŸË khzt®fS« 100 rjåj« nj®¢á ÉG¡fh£oid¥ bgW« tifÆš nkšÃiy¡fšÉÆš cŸs 12 ghl§fS¡F Äf K¡»akhd nfŸÉfŸ k‰W« ÉilfŸ bjhF¤J tH§f¥g£LŸsd.

j§fŸ gŸËÆ‹ üW ÉG¡fhL nj®¢áÆid ïy¡fhf¡ bfh©L brašgLkhW nf£L¡bfhŸ»nw‹. khzt®fË‹ vâ®fhy« áw¡f áwªj gÆ‰áÆid tH§» ekJ kht£l¤âš nj®¢á ÉG¡fh£oid ca®¤âl mid¤J tifÆY« áw¥ghf¢ brašgl vdJ thœ¤J¡fis¤ bjÇÉ¤J¡ bfhŸ»nw‹.

bkJthf¡f‰F« khzt®fS¡F« mâf kâ¥bg©fis¥ bgw ÉU«ò« khzt®fS¡F« V‰w tifÆš Ñœ¡f©l 12 ghl§fS¡F f£lf§fŸ jahÇ¡f¥g£LŸsd.
1. jÄœ, 2. M§»y«, 3. fÂj«, 4. ïa‰âaš, 5. ntâÆaš, 6. cÆÇaš, 7.Éy§»aš, 8. jhtuÉaš, 9. tuyhW, 10. bghUËaš, 11. tÂfÉaš, 12. fz¡F¥gâÉaš.

nry« kht£l khzt®fŸ muR bghJ¤nj®Éid vËjhf nj®î vGâ nj®¢á bg‰W mâf kâ¥bg©fŸ bgW« tifÆš áwªj mDgtÄ¡f k‰W« mâf nj®¢á ÉG¡fh£oid bg‰W¤ jªj KJfiy MáÇa®fË‹ FGÉid¡ bfh©L nry« b#auh« fšÿÇ k‰W« it°ah fšÿÇ Ã®thf¤â‹ rh®ghf jahÇ¡f¥g£l ï¡f£lf¤ij ga‹gL¤â x›bthU khztU« nj®¢á bgw thœ¤J»nw‹. muR¥ bghJ¤ nj®Éš mid¤J khzt®fS« bt‰¿ bgw c§fŸ gŸË¤ jiyikaháÇa® bgUk¡fS«, MáÇa¥ bgUk¡fS« c§fS¡F cWJizahf ïU¥gh®fŸ. mt®fË‹ tÊfh£LjÈ‹go ï¡ifna£oid go¤J midtU« nj®¢á bgw thœ¤J»nw‹.

m‹òl‹

(ïuh.<°tu‹)
Kj‹ik¡ fšÉ mYty®,
nry« kht£l«.

nry«
22-01-13

JAIRAM COLLEGE

## பாடம் 1. முதல் 5

### சரியான விடையைத் தேர்வு செய்க.

1. பிளாசிப் போர் நடை பெற்ற ஆண்டு - 1757
2. இரண்டாம் மைசூர் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை - மங்களூர்
3. ஆங்கில கிழக்கிந்திய வணிகக் குழு நிறுவப்பட்ட ஆண்டு - 1600 டிசம்பர் 31
4. மாவட்ட ஆட்சியாளரை முதன் முதலில் நியமித்தவர் - வாரன் ஹேஸ்டிங்ஸ்
5. மூன்றாம் பானிப்பட்டுப் போர் நடைபெற்ற ஆண்டு - 1761
6. 1781 - ல் அமெரிக்க விடுதலைப் போரில் சரணடைந்த ஆங்கிலத் தளபதி - காரன்வாலிஸ் பிரபு
7. காரன்வாலிஸ் அறிமுகப்படுத்தியது - நிலையான நிலவரித் திட்டம்.
8. ஆட்சிப் பணித்துறையின் தந்தை என அழைக்கப்பட்டவர் - காரன்வாலிஸ் பிரபு
9. வணிக வாரியத்தை சீரமைக்க காரன்வாலிஸ்க்கு துணைநின்றவர் - சார்லஸ் கிராண்ட்
10. துணைப்படைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் - வெல்லெஸ்லி பிரபு.
11. 1798- ல் துணைப்படைத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட முதல் நாடு - ஹைதராபாத்
12. வங்கப்புலி என்று தம்மை அழைத்துக் கொண்டவர் - வெல்லெஸ்லி பிரபு
13. இந்தியாவில் பிரிட்டீஷ் அரசு என்பதற்குப் பதில் பிரிட்டீஷ் இந்தியப் பேரரசு என உருவாக்க தீர்மானித்தவர் - வெல்லெஸ்லி பிரிவு
14. மைசூர் மீது படையெடுத்த முதல் சென்னை ஆளுநர் - மேடோஸ்
15. ஹேஸ்டிங்ஸ் பிரபு நேபாளத்தின் மீது படையெடுத்த ஆண்டு - 1814
16. கூர்க்கா போரில் வெற்றி பெற்றமைக்காக ஹேஸ்டிங்ஸ்க்கு வழங்கப்பட்ட பட்டம் - மார்குயில்
17. சதி வழக்கம் யாருடைய ஆட்சிக் காலத்தில் ஒழிக்கப்பட்டது - வில்லியம் பெண்டிங் பிரபு
18. சீராம்பூர் சமயப் பரப்பாளரான மார்ஷ்மேன் என்பவரால் வெளியிடப்பட்ட வங்காள வார இதழ் - சமாச்சார் தர்பன்
19. இந்திய மக்களின் நலனைப் பேணுவதே இந்தியாவில் ஆளும் பிரிட்டிஷாரின் தலையாய கடமை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்ட உறுப்பினர் - வில்லியம் பெண்டிங் பிரபு
20. தலைமை ஆளுநரின் ஆலோசனைக் குழுவில் நியமிக்கப்பட்ட முதல் சட்ட உறுப்பினர் - டி.பி. மெக்காலே
21. 1833 பட்டய சட்டத்தின் படி இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் - வில்லியம் பெண்டிங் பிரபு
22. இந்தியாவில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்ட ஆண்டு - 1835

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தியவர் இராபர்ட் கிளைவ்
2. ஹைதர் அலி மறைந்த ஆண்டு 1782
3. காரன் வாலிஸ் பிரபு தனது சக பணியாளரான ஜார்ஜ் பார்லோ துணையுடன் சட்டத் தொகுப்பை உருவாக்கினார்.
4. நான்காம் மைசூர் போர் நடைபெற்ற ஆண்டு 1799
5. சிந்தியா பிரிட்டிஷாருடன் செய்து கொண்ட துணைப்படைத்திட்ட உடன்படிக்கை சுர்ஜிஅர்ஜீன்கான்.
6. 1768 நேபாளம் ஒரு வலிமை மிக்க கூர்க்கா நாடாக எழுச்சி பெற்றது.
7. வேலூர் சிப்பாய் கலகம் நடைபெற்றஆண்டு 1806
8. ராணுவத் துறையில் வில்லியம் பெண்டிங் பிரபு இரட்டைபேட்டா முறையை ரத்து செய்தார்.
9. குடகை ஆட்சி புரிந்த அரசர் வீரராஜா
10. முதல் பர்மிய போரின் முடிவில் ஏற்பட்ட உடன்படிக்கை யாண்ட பூ
11. வேலூர் கலகம் நடைப்பெற்ற போது சென்னை ஆளுநராக இருந்தவர் வில்லியம் பெண்டிங் பிரபு

### பொருத்துக

1. பிரான்சிஸ் டே - புனித ஜார்ஜ் கோட்டை
2. சதர் திவானி அதாலத் - சிவில் நீதி மன்றம்
3. ஹபிஸ் ரஹ்மத்கான் - ரோகில் கண்ட்
4. கட்டுப்பாட்டு வாரியம் - பிட் இந்திய சட்டம்
5. மூன்றாம் கிருஷ்ணா ராஜா - மைசூர்

JAIRAM COLLEGE

6. சரபோஜி - தஞ்சாவூர்
7. நானா பாட்னாவிஸ் - மராட்டியர்
8. உமாதத் உல் உமாரா - கர்நாடகம்
9. சமாச்சார் தர்பன் - வங்காள வார இதழ்
10. சர் தாமஸ் மன்றோ - ரயத்துவாரி முறை
11. கரீம்கான் - பிண்டாரிகள்
12. அமர்சிங்தாபா - நேபாள தளபதி
13. மெக்கலே பிரபு - சட்ட உறுப்பினர்
14. வீரராஜா - கூர்க்
15. வில்லியம் சீலிமேன் - தக்கர்கள்
16. இரஞ்சித் சிங் - பஞ்சாப்

பின்வருவனவற்றை சரியா தவறா என்று கூறுக

1. ஆங்கில கிழக்கிந்திய வணிகக் குழு 1600 ஆம் ஆண்டு டிசம்பர் 31 நாள் நிறுவப்பட்டது - சரி
2. சால்பாய் உடன்படிக்கை வாரன் ஹேஸ்டிங்ஸ் மற்றும் இரண்டாம் மாதவராவ் ஆகியோருக்கிடையே செய்து கொள்ளப்பட்டது - தவறு
3. காரன்வாலிஸ் பிரபு ஆட்சி காலத்தில் குற்றவியல் வழக்குகளில் இந்து சட்டம் பின்பற்றப்பட்டது - தவறு
4. சர் ஜான் ஷோர் வெல்லெஸ்லி பிரபுவுக்குப் பின் பதவிக்கு வந்தார் - தவறு
5. 1802- ல் இரண்டாம் பாஜீராவ் பசீன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்- சரி
6. நான்காம் மைசூர் போருக்குப் பின் திப்புவின் குடும்பம் வேலூர் கோட்டைக்கு அனுப்பப்பட்டது - சரி
7. கூர்க்கா போருக்குப் பிறகு காத்மாண்டுவில் பிரிட்டிஷ் தூதுவரை நியமிக்க கூர்க்காக்கள் சம்மதித்தனர் - சரி
8. வில்லியம் பெண்டிங் பிரபு கல்கத்தா மருத்துவக் கல்லூரியை நிறுவினார்- சரி
9. 1838 - ல் வில்லியம் பெண்டிங் பிரபு தலைமை ஆளுநராக பொறுப்பு ஏற்றார் - தவறு

## பாடம் 6 - 10

சரியான விடையை தேர்வு செய்க

1. டல்ஹௌசி பிரபு பஞ்சாபை இணைத்துக் கொண்ட ஆண்டு - 1849
2. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள் - பஞ்சாப்
3. நிலையான நிலவரி திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் - காரன்வாலிஸ்பிரபு
4. ஜோனாதன் டங்கன் வடமொழிக் கல்லூரியை நிறுவிய இடம் - பனாரஸ், காசி
5. விதவைகள் மறுமண சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு - 1856
6. நெல் கட்டும் செவல் பகுதியை கைப்பற்றியவர் - கர்னல் காம்ப்பெல்
7. கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனை வந்து சந்திக்க சொன்ன இடம் - இராமநாதபுரம்
8. வேலூர் கலகத்திற்கான காரணம் - புதிய ஆயுதங்கள், சீருடைகள் அறிமுகம்

கோடிட்ட இடத்தை நிரப்புக

1. பம்பாய் - தானாவை இணைத்த முதல் ரயில் பாதை திறக்கப்பட்ட ஆண்டு -1853
2. நவீன அஞ்சல் முறையை தொடங்கி வைத்தவர் - டல்ஹௌசி பிரபு
3. மகல்வாரி முறையின் கீழ் நிலவரித் திட்டத்தின் அடிப்படை அலகு - கிராமம்
4. சாரதா சட்டம் பெண்களின் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை ஆண்டுகளாக உயர்த்தியது - 14
5. ஹிடாகாரிணி சபையை அமைத்தவர் - டாக்டர் பீம்ராவ் அம்பேத்கார்.
6. மெக்காலேவின் குறிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு - 1835
7. வீரபாண்டிய கட்டபொம்மனின் தந்தை பெயர் - ஜெகவீர பாண்டியன்
8. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம் - கயத்தாறு
9. பாஞ்சாலங்குறிச்சி மீது படையெடுத்த தளபதி - மேஜர் பானர்மேன்
10. வேலூர் கோட்டையின் இராணுவத் தளபதி - சர் ஜான் கிரடாக்

JAIRAM COLLEGE

பொருத்துக

1. வுட் அறிக்கை - 1854
2. இரண்டாம் பர்மியப் போர் - 1852
3. அயொத்தி இணைப்பு - 1856
4. சென்னைப் பல்கலைக் கழகம் நிறுவப்படுதல் - 1857
5. மஸ்லின் - டாக்கா
7. பட்டு - பனாரஸ்
8. கம்பள விரிப்புகள் - லாகூர்
9. உலோக வேலைப்பாடுகள் - தஞ்சாவூர்
10. ஹரிஜன சேவக் சங்கம் - மகாத்மா காந்தி
11. சத்ய சோதக் சமாஜம் - ஜோதிராவ் பூவே
12. நாராயண தர்ம பரிபாலன யோகம் - நாராயண குரு
13. சுயமரியாதை இயக்கம் - பெரியார் ஈ. வெ.ரா.
14. அகில பாரதீய தலித் வர்க்க சபை - அம்பேத்கார்.

பொருத்துக

1. மருது பாண்டியர் - சிவகங்கை
2. கோபால நாயக்கர் - திண்டுக்கல்
3. கேரள வர்மா - மலபார்
4. கிருஷ்ணப்ப நாயக்கர் - மைசூர்
5. புலித் தேவர் - நெல்கட்டும் செவல்
6. பதே ஹைதர் - திப்புவின் மகன்
7. கர்னல் பான் கோர்ட் - கலகத்தில் கொல்லப்பட்டவன்
8. கர்னல் ஜில்லெஸ்பி - கலகத்தை அடக்கியவர்.
9. வில்லியம் பெண்டிங் - சென்னை ஆளுநர்

பின்வருவனவற்றை சரியா தவறா என்று கூறுக

1. 1850 - ல் ஓ ஷாகன்னசே தந்தித் துறையின் முக்கிய கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார் - தவறு
2. வாரன் ஹேஸ்டிங் பிரபு நிலத்தை ஏலத்துக்கு விட்டு ஆண்டு குத்தகை முறையை அறிமுகப்படுத்தினார் - சரி
3. பூ வேலைப்பாடுகளுக்கு பனாரஸ் புகழ் பெற்று விளங்கியது - சரி
4. இந்திய வணிக நலன்களுக்கு ஏற்றவாறு கிழக்கிந்திய வணிகக்குழு தனது சுங்க வரிக் கொள்கைகளை மாற்றி அமைத்தது - தவறு
5. வாரன் ஹேஸ்டிங்ஸ் பம்பாயில் ஒரு மதரசாவை உருவாக்கினார் - தவறு
6. ஆங்கில ஆதரவாளர்கள் மேற்கத்திய அறிவியல் மற்றும் இலக்கியத்தை ஆங்கில மொழி வழி பயிற்றுவிக்க வேண்டும் என்று வாதாடினர் - சரி
7. ஈஸ்வர சந்திர வித்யா சாகர், விதவை மறுமணத்தை பிரபலபடுத்த பிரச்சாரத்தை மேற்கொண்டார். சரி
8. தமிழ் நாட்டில் விஜயநகர ஆட்சி விரிவுபடுத்தப்பட்டபோது பாளையக்காரர் முறை தோன்றியது - சரி
9. சிவகிரி பாளையக்காரர் ஆங்கிலேயர் வணிகக் குழுவிற்கு கட்டுப்பட்டிருந்தனர் - சரி
10. 1801 -ல் ஊமைத்துரை, செவத்தையா ஆகியோரின் தலைகள் மதுரையில் துண்டிக்கப்பட்டன - சரி
11. வேலூர் கலகத்தைப் பற்றிய இந்திய சிப்பாயான முஸ்தபா பெக் முன் எச்சரிக்கை செய்தார் - சரி
12. வேலூர் கலகத்தின் போது ஆங்கிலேய இராணுவ அதிகாரிகள் ஒருவர் கூட கொல்லப்படவில்லை - தவறு
13. 1853-ல் பம்பாய்க்கும் தானேவுக்கும் இடையே முதல் ரயில் போக்குவரத்து துவக்கப்பட்டது - சரி

## பாடம் 11 - 15

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

1. 1857 - ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலைப் போர் என்று கருதியவர் - வீரசாவர்க்கர்
2. 1857 - ஆம் ஆண்டு கலகத்திற்கு உடனடி காரணமாக அமைந்த நிகழ்வு - கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கித் தோட்டாக்கள்
3. இந்தியாவின் முதல் வைசிராய் - கானிங் பிரபு
4. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு - 1878
5. பிரம்ம சமாஜம் நிறுவப்பட்ட ஆண்டு - 1828
6. அலிகார் இயக்கத்தைத் தொடங்கியவர் - சர் சையது அகமது கான்
7. சத்ய ஞான சபை நிறுவப்பட்ட இடம் - வடலூர்

JAIRAM COLLEGE

8. இந்திய தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர் - **A.O** ஹியூம்
9. மிதவாதிகளின் தலைவராக இல்லாதவர் - பாலகங்காதர திலகர்
10. திவிரவாதம் தோன்றுவதற்கான காரணம் இல்லாதது எது - இல்பர்ட் மசோதா
11. முஸ்லிம்லீக் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு - 1906

கோடிட்ட இடத்தை நிரப்புக

1. பாரக்பூரில் கொழுப்புத் தடவிய துப்பாக்கித் தோட்டாக்களைப் பயன்படுத்த மறுத்தவர் மங்கள் பாண்டே
2. பேரரசின் அறிக்கையை கானிங்பிரபு வாசித்த இடம் அலகாபாத்
3. முதலாவது பஞ்ச நிவாரணகுழு யார் தலைமையில் தொடங்கப்பட்டது சர் ரிச்சர்ட் ஸ்ட்ரோச்சி
4. இந்திய பல்கலைக்கழகங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு 1904
5. இராஜாராம் மோகன்ராய் தொடங்கிய வங்காளப் பத்திரிக்கை சம்வாத்கௌமதி
6. சுவாமி தயானந்த சரஸ்வதி எழுதிய நூல் சத்யார்த்தபிரகாஷ்
7. சத்யசோதக் சமாஜத்தை நிறுவியவர் ஜோதிபா கோவிந்த பூலே
8. இந்திய தேசிய காங்கிரஸ் முதல் மாநாடு நடைபெற்ற இடம் பம்பாய் 1885
9. பிரிட்டிஷ் பொதுமக்கள் சபையில் உறுப்பினரான முதல் இந்தியர் தாதாபாய் நௌரோஜி
10. சூரத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் பிளவுபட்ட ஆண்டு -1907
11. பாரத மாதா சங்கத்தைத் தோற்றுவித்தவர் - நீலகண்டபிரம்மாச்சாரி

பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. பகதூர்ஷா | - | டெல்லி |
| 2. நானா சாகிப் | - | கான்பூர் |
| 3. அயோத்தி பேகம்கள் | - | லக்னோ |
| 4. இராணி இலக்குமிபாய் | - | ஜான்சி |
| 5. கன்வர் சிங் | - | பீகார் |
| 6. படைக்கலச் சட்டம் | - | லிட்டன்பிரபு |
| 7. உள்ளாட்சி அமைப்புகள் | - | ரிப்பன் பிரபு |
| 8. கல்விக்குழு | - | வில்லியம் ஹண்டர் |
| 9. வங்கப்பிரிவினை | - | கர்சன் பிரபு |
| 10. காவல் துறைக்குழு | - | ஆன்ட்ரூ புரேசர் |
| 11. ஆத்மியசபை | - | இராஜாராம் மோகன்ராய் |
| 12. இளம் வங்காள இயக்கம் | - | ஹென்றி விவிலியன் டெராசோ |
| 13. பிரார்த்தனை சமாஜம் | - | ஆத்மாராவ் பாண்டுராங் |
| 14. நிரங்காரி இயக்கம் | - | பாபாதயாள் |
| 15. பிரம்ம ஞான சபை | - | ஆல்காட் |
| 16. டெல்லி தர்பார் | - | லிட்டன் பிரபு |
| 17. இல்பர்ட் மசோதா சிக்கல் | - | ரிப்பன் பிரபு |
| 18. இந்திய சங்கம் | - | எஸ்.என். பானர்ஜி |
| 19. இந்திய பணியாளர் சங்கம் | - | கோகலே |
| 20. கேசரி | - | பாலகங்காதர திலகர் |
| 21. பஞ்சாபின் சிங்கம் | - | லாலாலஜபதிராய் |
| 22. சலிமுல்லாகான் | - | முஸ்லிம் லீக் |
| 23. காதர் கட்சி | - | லாலா ஹர் தயாள் |
| 24. அபினவ் பாரத் | - | மகாராஷ்டிரம் |
| 25. செல்வச் சுரண்டல் கோட்பாடு | - | தாதாபாய்நௌரோஜி |

சரியா ....? தவறா .....?

1. இரண்டாம் பகதூர்ஷா கைது செய்யப்பட்ட ரங்கூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார் - சரி
2. 1806 - ல் வேலூர் சிப்பாய் கலகம் 1857 - ஆம் ஆண்டு பெருங்கலகத்திற்கு ஒரு முன்னோடியாக கருதப்படுகிறது - சரி
3. 1857 - ஆம் ஆண்டு கலகம் இந்து முஸ்லீம் பிரிவினை ஏற்படுத்தியது - தவறு
4. பிரிட்டிஷ் பிரதமர் டிஸ்ரேலி , லிட்டன் பிரபுவை இந்தியாவின் வைஸ்சிராயாக நியமித்தார் - சரி
5. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம் இந்தியப் பத்திரிக்கையின் சுதந்திரத்தை நசுக்கியது - சரி
6. வேதகாலத்திற்கு திரும்புங்கள் என்பது சுவாமி தயானந்த சரஸ்வதியின் கொள்கையாகும் - சரி
7. இராமகிருஷ்ணரின் உண்மையான பெயர் நரேந்திரநாத் தத்தா என்பதாகும் - தவறு
8. ஈஸ்வர சந்திர வித்யாசாகர் விதவை மறுமணத்தை எதிர்த்தார் - தவறு



JAIRAM COLLEGE

9. இராமலிங்க அடிகளார் திருவருட்பாவை இயற்றினார் - சரி
10. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர் W.C பானர்ஜி ஆவார் - சரி
11. "வறுமையும் இந்தியாவில் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்" என்ற நூலை S.N பானர்ஜி எழுதினார் - தவறு
12. கர்சன் பிரபுவின் பிற்போக்கு கொள்கையே தீவிரவாதிகளின் எழுச்சிக்கு உடனடிக் காரணமாக இருந்தது. - சரி
13. சுயராஜ்யத்தை பிறப்புரிமையாக கருதி முதலில் கோரிக்கை எழுப்பியவர்கள் தீவிரவாதிகளே ஆவர். - சரி
14. 1905 - ல் அகில இந்திய முஸ்லிம் லீக் நிறுவப்பட்டது. - தவறு

## பாடம் 16 - 20

### கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு 1919
2. முழுச் சுதந்திரம் பற்றிய தீர்மானம் இயற்றப்பட்ட இடம் லாகூர்
3. வகுப்பு வாரி கொடையை அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மெக்டொனால்ட்
4. சென்னை சுதேசி சங்கம் நிறுவப்பட்ட ஆண்டு 1852
5. சுதேசி நீராவி கப்பலை நிறுவியவர் வ.உ.சிதம்பரனார்
6. இந்து சமய அறநிலைய சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு 1921
7. 1919-ம் ஆண்டு அரசு சட்டம் மாண்டேகு செம்ஸ்போர்டு வைஸ்ராயாக இருந்த போது நிறைவேற்றப்பட்டது.
8. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் மாகாண சுயாட்சி ஐ அறிமுகப்படுத்தியது.
9. தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்ற இந்திய சட்ட உறுப்பினர் எஸ்.வி.சின்ஹா
10. இந்தியாவின் இரும்பு மனிதன் சர்தார் வல்லபாய் படேல்
11. ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட்ட ஆண்டு 1953
12. நவீன இந்தியாவின் சிற்பி எனக் கருதப்படுவர் ஜவஹர்லால் நேரு
13. புதிய கல்வி கொள்கையை அறிமுகப்படுத்தியவர் ராஜிவ்காந்தி
14. உணவில் தன்னிறைவை அடைவதை நோக்கமாகக் கொண்டு பசுமைப்புரட்சி தொடங்கப்பட்டது.
15. பாபா அணு ஆய்வு மையம் அமைந்துள்ள இடம் டிராம்பே
16. பங்களாதேஷ் நாடு உருவான ஆண்டு 1971

## பாடம் 16 - 20

### சரியான விடையைத் தேர்வு செய்க

1. கேடா சத்தியாகிரகத்தை காந்தி யாரை ஆதரிப்பதற்காகத் தொடங்கினார் - குடியானவர்கள்
2. சௌரி சௌரா நிகழ்ச்சி நடைபெற்ற ஆண்டு - 1922
3. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் மாநாட்டில் முதல் தீர்மானத்தை கொண்டு வந்தவர்-ஜி.சுப்ரமணிய அய்யர்
4. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்திற்கு தலைமையேற்றவர் - ராஜாஜி
5. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு - 1916
6. பின்வருவனவற்றுள் பெரியார் தொடங்காத பத்திரிக்கை எது - சுயராஜ்யா
7. பின்வருவனவற்றுள் 1858 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் ஷரத்து எது -15 உறுப்பினர்கள் கொண்ட இந்திய கவுன்சில் அமைக்கப்பட்டது.
8. சட்டமன்றங்களுக்கான தேர்தலை சட்டபூர்வமாக ஏற்றுக் கொண்ட சட்டம் -1909 ஆம் ஆண்டு சட்டம்.
9. இந்திய ஒன்றியத்தில் சேர மறுத்த அரசு -ஹைதராபாத்
10. முதலாவது இந்திய தொழில் நுட்ப கழகம் துவங்கப்பட்ட இடம் - கரக்பூர்
11. சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத முதல் அமைச்சரவைக்கு தலைமையேற்றவர் - மொராஜிதேசாய்
12. அரசியலமைப்பு குழுவிற்கு தலைவராக இருந்தவர் - டாக்டர் ராஜேந்திரபிரசாத்

## பாடம் 16 -20

### சரியா ....? தவறா .....?

1. முதல் உலகப் போரில் துருக்கி தோற்றதே கிலாபத் இயக்கத்திற்கு முக்கிய காரணமாகும் - சரி
2. டாக்டர் அம்பேத்காருக்கும்,பிரிட்டிஷாருக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தமே பூனா ஒப்பந்தம் எனப்படுகிறது - தவறு
3. சென்னை மகாஜன சங்கம் இந்திய தேசிய காங்கிரசை பலமாக எதிர்த்தது - தவறு
4. பாரத மாதா சங்கம் என்பது தமிழ்நாட்டில் செயல்பட்ட ஒரு புரட்சி இயக்கம் - சரி

JAIRAM COLLEGE

5. பெரியார், ஈ.வே.ரா வைக்கம் சத்யாகிரகத்தை தொடங்கினார் - சரி
6. நீதிகட்சி ஆட்சி 13 ஆண்டுகளுக்கு நீடித்தது - சரி
7. இலவச மற்றும் கட்டாயக் கல்வியை நீதிக்கட்சி அறிமுகப்படுத்தியது - சரி
8. 1858 ஆம் ஆண்டு சட்டம் இந்தியாவின் தலைமை ஆளுநரை இந்தியாவின் வைஸ்ராயாக நியமித்தது - சரி
9. 1937- ல் காமராஜ் தலைமையில் காங்கிரஸ் சென்னையில் அமைச்சரவை அமைத்தது - தவறு
10. 1861- ஆம் ஆண்டு சட்டம் தலைமை ஆளுநரின் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5 லிருந்து 6 ஆக உயர்த்தியது - தவறு
11. 1919 ஆம் ஆண்டு சட்டப்படி லண்டனில் இந்தியாவிற்கான உயர் ஆணையர் நியமிக்கப்பட்டார் - சரி
12. பசல் அலி தலைமையில் மாநிலங்கள் சீரமைப்புக்குழு ஏற்படுத்தப்பட்டது - சரி
13. பி.வி.நரசிம்மாராவ் ஆட்சியின் போது டாக்டர் மன்மோகன்சிங் நிதியமைச்சராக இருந்தார் - சரி

பொருத்துக

1. ஜாலியன் வாலாபாக் படுகொலை - 1919
2. சுயராஜ்ய கட்சி - 1923
3. தண்டியாத்திரை - 1930
4. பூனா ஒப்பந்தம் - 1932
5. காந்தி இர்வின் ஒப்பந்தம் - 1931
6. சுப்ரமணிய பாரதி - இந்தியா
7. அன்னிபெசண்ட் அம்மையார் - நியூ இந்தியா
8. ஜி.சுப்ரமணிய அய்யர் - சுதேச மித்திரன்
9. பி.அனந்தா சாருலூ - சென்னை மகாஜன சங்கம்
10. இட ஒதுக்கீட்டு அரசானை - 1921
11. பணியாளர் தேர்வு குழு - 1924
12. தொழிற்சாலைகளுக்கு உதவி வழங்கும் சென்னை அரசின் சட்டம் - 1922
13. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - 1929
14. இந்தியாவுக்கான அயலுறவுச் செயலர் - 1858
15. மாகாணங்களின் இரட்டையாட்சி - 1919
16. அனைத்திந்திய கூட்டாட்சி - 1935
17. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் - 1909
18. ராஜா ஹரிசிங் - காஷ்மீர்
19. இந்திரா காந்தி - அவசர நிலை ஆட்சி
20. வி.பி.சிங் - மண்டல் குழு
21. ஹோமி. ஜே. பாபா - அணுசக்தி கழகம்
22. விக்ரம் சாரா பாய் - இ.எஸ்.ஆர்.ஒ(இஸ்ரோ)

## பாடம் 21 - 25

சரியான விடையைத் தேர்வு செய்க

1. ஆட்டோமன் துருக்கியர்கள் கான்ஸ்டான்டி நோபிளை கைப்பற்றிய ஆண்டு - 1453
2. நவீன அறிவியலின் தந்தை என்று கருதப்படுபவர் - பிரான்சிஸ் பேகன்
3. மெடீரா மற்றும் அசோர் தீவுகளை கண்டுபிடித்தவர் - ஹென்றி
4. சமய சீர்திருத்தத்தின் விடிவெள்ளி எனக் கருதப்படுபவர் - ஜான் வைக்கிளிப்
5. "பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியில்லை" என்ற முழக்கம் எந்த நாட்டில் நடைபெற்ற புரட்சியின் போது எழுப்பப்பட்டது -அமெரிக்கா
6. "பொது அறிவு" என்னும் நூலின் ஆசிரியர் - தாமஸ் பெய்ன்
7. 1789 ம் ஆண்டு பிரெஞ்சு புரட்சியின் போது பிரான்சின் மன்னர் - 16 -ம் லூயி

### கோடிட்ட இடங்களை நிரப்புக

1. பொக்காசியோ <u>பெட்ரார்க்ன்</u> சீடராவார்.
2. "இளவரசன்" என்ற அரசியல் அறிவியல் நூலை எழுதியவர் <u>மாக்கியவல்லி</u>
3. தொலைநோக்கியைக் கண்டறிந்தவர் <u>கலிலியோ</u>
4. வாஸ்கோடகாமா இந்தியாவைச் சென்றடைந்த ஆண்டு கி.பி.<u>1498</u>

JAIRAM COLLEGE

5. கனடாவைக் கண்டுபிடித்தவர் ஜேக்கஸ் கார்டியர்
6. இயேசு சபையை நிறுவியவர் இக்னேஷியஸ் லயோலா
7. ஜெனிவா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் ஜான் கால்வின்
8. 1774ல் முதல் கண்ட மாநாடு நடைபெற்ற இடம் பிலடெல்பியா
9. ஏழாண்டுப் போர் நிறைவடைந்த ஆண்டு 1763
10. அமெரிக்க விடுதலைப் போர் பாரிஸ் உடன்படிக்கைப்படி முடிவுக்கு வந்தது.
11. "சமூக ஒப்பந்தம்" என்ற நூலின் ஆசிரியர் ரூசோ
12. ஸ்டேட்ஸ் ஜெனரலின் முதலாவது பிரிவு உயர்குடியினர் பிரிதிநிதிகளைக் கொண்டது.

பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | இறுதி விருந்து | - லியானார்டோ டாவின்சி |
| 2. | இறுதி தீர்ப்பு | - மைக்கேல் ஆஞ்சலோ |
| 3. | மடோன்னா | - ரபேல் |
| 4. | உடோபியா | - சர்தாமஸ் மூர் |
| 5. | முட்டாள்களின் கப்பல் | - செபாஸ்டியன் பிராண்ட் |
| 6. | பார்த்லோமிய டயஸ் | - புயல் முனை |
| 7. | கொலம்பஸ் | - பஹாமாத் தீவுகள் |
| 8. | அமெரிகோ வெஸ்புகி | - அமெரிக்கா |
| 9. | ஜான்கேபட் | - நியு பவுண்ட்லாந்து |
| 10. | மார்ட்டின் லூதர் | - ஜெர்மனி |
| 11. | உல்ரிச் ஸ்விங்ளி | - ஸ்விட்சர்லாந்து |
| 12. | ஜான் கேல்வின் | - பிரான்ஸ் |
| 13. | இக்னேஷியஸ்ல யோலா | - ஸ்பெயின் |
| 14. | ஜான் வைக்ளிப் | - இங்கிலாந்து |
| 15. | முத்திரைத்தாள் சட்டம் | - 1765 |
| 16. | சர்க்கரைச் சட்டம் | - 1764 |
| 17. | பாஸ்டன் தேநீர் விருந்து | - 1773 |
| 18. | டவுண்ஷெண்ட் சட்டங்கள் | - 1767 |
| 19. | கலைக்களஞ்சியம் | - டிஆலம்பர்ட் |
| 20. | செப்டம்பர் படுகொலைகள் | - டான்டன் |
| 21. | பயங்கர ஆட்சி | - ரோபஸ்பியர் |
| 22. | சட்டத்தின் சாரம் | - மாண்டஸ்கியூ |

பின்வருவனவற்றுள் சரியா, தவறா என்று கூறுக.

1. தாந்தே தமது "தெய்வீக இன்பவியல்" நூலை லத்தீன் மொழியில் எழுதினார் - சரி
2. அச்சு இயந்திரத்தை முதலில் கண்டறிந்தவர் வில்லியம் காக்ஸ்டன் - தவறு
3. 1598 - ல் வாஸ்கோடாகாமா இந்தியாவை வந்தடைந்தார் - தவறு
4. இத்தாலிய மாலுமியான அமெரிக்கோ வெஸ்புகி ஸ்பெயின் நாட்டு அரசரின் உதவியுடன் தென் அமெரிக்க பகுதிகளை ஆராய்ந்தார் - சரி
5. இங்கிலாந்து நாட்டின் அரசர் எட்டாம் ஹென்றி துவக்கத்தில் மார்ட்டின் லூதரை ஆதரித்த போப்பை எதிர்த்தார் - தவறு
6. ஆங்கிலேய திருச்சபை எட்வர்டு காலத்தில் முற்றிலும் பிராட்டஸ் டண்டு மதத்திற்கு மாறியது = சரி
7. சரடோகா வெற்றி அமெரிக்க சுதந்திரப் போரில் திருப்புமுனையாக அமைந்தது -சரி
8. 1781 - ல் ஆங்கிலேய துருப்புகளை தலைமை தாங்கிய தளபதி காரன்வாலிஸ் லெக்ஷிங்டன் எனுமிடத்தில் வாஷிங்டனிடம் சரணடைந்தார்.- சரி
9. மேரிஅன்டாய்னட் 16-ம் லூயி அரசி மற்றும் மனைவியாவார் - சரி
10. அதிகாரப் பிரிவினைக் கருத்தை மாண்டெஸ்கியூ கூறினார் - சரி

## 26- ம் பாடம் முதல் 35 -ம் பாடம் முடிய

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. பயிர் சூழற்சி முறையை அறிமுகப்படுத்தியவர் - டவுன்வெண்ட்



JAIRAM COLLEGE

2. குடிபெயர்ந்தோர் குடியேற்றம் எது? - 13 அமெரிக்க குடியேற்றங்கள்
3. ரஷ்யாவில் போல்ஷ்விக்கு கட்சியை தலைமையேற்று நடத்தியவர்- லெனின்
4. பன்னாட்டு கழகம் உருவாக காரணமாக இருந்தவர்- உட்ரோவில்சன்
5. முசோலினி வெளியிட்ட பத்திரிக்கை - அவந்தி
6. தேசிய சோஷலிஸ்டு கட்சியை நிறுவியவர் (நாசிசம்) - ஹிட்லர்
7. ஜப்பான் பெர்லில் துறைமுகத்தின் மீது தாக்குதல் தொடுத்த ஆண்டு - 1941 டிசம்பர் 7
8. ஆசியாவின் நோயாளி - துருக்கி
9. ஐ.நா.சபையின் தலைமையகம் அமைந்துள்ள இடம் - நியூயார்க்
10. முதல் அபினிப் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை - நான்கிங்
11. கெடுபிடி போர் என்னும் சொல்லை முதலில் பயன்படுத்தியவர் - பெர்னாட்பரோச்
12. பன்னாட்டு வாணிப அமைப்பு **WTO** ஏற்பட காரணமாயிருந்த மாநாடு - பிரட்டன்வுட்ஸ்

கோடிட்ட இடத்தை நிரப்புக
1. தொழிற்புரட்சி என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர் - ஜார்ஜ் மிஸ்லெட் & பிரடரிக் ஏங்கல்ஸ்
2. பண்ணை விலங்குகளின் உற்பத்தியில் நவீன முறையை அறிமுகப்படுத்தியவர்- பிளாக்வெல்
3. தொலைபேசியை கண்டறிந்தவர் - அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல்
4. மின்சார விளக்கை கண்டுபிடித்தவர் - எடிசன்
5. மூன்று பேரரசர்களின் கழகத்தை அமைத்தவர் - பிஸ்மார்க்
6. பெர்லின் மாநாடு கூட்டப்பட்ட ஆண்டு 1878 ஆகும்
7. சோவியத் சோஷலிஸ்டு கூட்டரசு அமைக்கப்பட்ட ஆண்டு 1922
8. பாசிசம் என்பது முசொலினி என்பாரது கொள்கை
9. பன்னாட்டு கழகம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 1920
10. ரோம் - பெர்லின் டோக்கியோ அச்சு 1937ம் ஆண்டு உருவானது.
11. அமெரிக்கா -ஹிரோஷிமா மீது அணுகுண்டை வீசிய ஆண்டு 1945 ஆகஸ்டு 6
12. பசிபிக் பகுதியின் தலைமைத் தளபதி மெக்ஆர்தர்
13. கோமின்டாங் கட்சியை நிறுவியவர் **Dr.**சண்யாட்சென்
14. சான்பிரான்சிஸ்கோ அமைதி உடன்படிக்கை 1951 -ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்டது.
15. ஐ.நா. சபையின் நீதித்துறை பன்னாட்டு நீதி மன்றம்
16. ஐ.நா.சபை அமைக்கப்பட்ட ஆண்டு அக்டோபர் 24(1945)
17. உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட ஆண்டு செப் 11.2001
18. உலக வர்த்தக மையத்தின் தலைமையகம் ஜெனிவாவில் அமைந்துள்ளது.
19. ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் 1972
20. அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம் **CTBT** எனப்படும்.

பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. | பறக்கும் நாடா | - ஜான்கே |
| 2. | நூற்கும் ஜன்னி | - ஹார்க்ரீவ்ஸ் |
| 3. | விசைத்தறி | - கார்ட்ரைட் |
| 4. | தையல் இயந்திரம் | - எலியாஸ் ஹோவே |
| 5. | நீராவி இயந்திரம் | - ஜேம்ஸ் வாட் |
| 6. | வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை | - ஜெர்மனி |
| 7. | நியூலி உடன்படிக்கை | - பல்கேரியா |
| 8. | செவ்ரஸ் உடன்படிக்கை | - துருக்கி |
| 9. | செயின்ட் ஜெர்மய்ன் உடன்படிக்கை | - ஆஸ்திரியா |
| 10. | சார் நிக்கோலஸ் | - ரோமானாவ் வம்சம் |
| 11. | செந்ஞாயிறு | - 1905 ஜனவரி 22 |
| 12. | ஏப்ரல் வாக்குறுதிகள் | - லெனின் |
| 13. | கெரன்ஸ்கி | - தற்காலிக அரசாங்கம் |
| 14. | பன்னாட்டு தலைமையகத்தின் தலைமையகம் | - ஜெனிவா |
| 15. | பன்னாட்டு நீதிமன்றம் | - திஹேக் |
| 16. | இத்தாலி | - செர்புக் தீவு |
| 17. | மோசல் கோடு | - துருக்கி & ஈராக் |



JAIRAM COLLEGE

18. இலண்டன் உடன்படிக்கை - 1915
19. பாசிசக் கட்சி - 1919
20. ஆயுத குறைப்பு மாநாடு - 1932
21. போல்ஸ்விக் புரட்சி - 1917
22. முசோலினி - பாசிசம்
23. மஞ்சூரியா - ஜப்பான்
24. தளபதி மெக் ஆர்தர் - பசிபிக் பகுதியின் தலைமை தளபதி
25. ஹிட்லர் - நாசிசம்
26. ஹங் - சியு - சான் (சியூதவான்) - தைப்பிங் கலகம்
27 **Dr**.சன்யாட்சென் - சீனாவின் விடிவெள்ளி
28. மாசேதுங் - பண்பாட்டு புரட்சி
29. ஹிரோ ஹிட்டோ - ஜப்பானியப் பேரரசர்
30. ஐ.நா. சாசனம் - 1945
31. சூயஸ் சிக்கல் - 1946
32. சைப்ரஸ் சிக்கல் - 1960
33. நேட்டோ - 1949
34. வளைகுடாப் போர் - 1990
35. சீட்டோ - 1954
36. சென்டோ - 1955
37. வார்சா ஒப்பந்தம் - 1955
38. இ.இ.சி - 1958
39. வெப்ப உயர்வு - சுற்று சூழல் பாதுகாப்பு
40. ட்ருமன் கோட்பாடு - 1948
41. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் - அணு ஆயுத குறைப்பு

பாடம் 26-35

பின்வருவனவற்றை சரியா, தவறா என்று கூறுக

1. தொழிற்சாலைக்கு கச்சாப் பொருட்களைக் கொண்டு வருவதிலும், சந்தைக்கு உற்பத்தி பொருளை எடுத்து செல்வதிலுமே தொழிற்புரட்சி பெரிதும் சார்ந்துள்ளது - தவறு
2. 1814- ல் ஸ்மீடன் முதலாவது இரயில் எஞ்சினை கண்டுபிடித்தவர்- தவறு
3. பன்னாட்டு அஞ்சல் சேவைக்கு உதவியாக 1875 ல் அனைத்துலக அஞ்சல் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. சரி
4. முக்கூட்டு ஒப்பந்தம் ஜெர்மனி, ஆஸ்திரியா - ஹங்கேரி, இத்தாலி நாடுகளுக்கிடையே செய்து கொள்ளப்பட்டது - சரி
5. முதல் உலகப் போரின் போது இரண்டாம் வில்லியம் ஜெர்மனியின் அரசராக இருந்தார் -சரி
6. ஆர்ச்டியூக் பெர்டினாட்டின் படுகொலை முதல் உலகப் போருக்கு உடனடிக் காரணமாக அமைந்தது - சரி
7. பிரஸ்ட் லிடோவிஸ்க் உடன்படிக்கை இரஷ்யாவுக்கும் இத்தாலிக்கும் இடையே ஏற்பட்டது- தவறு
8. முதல் உலகப் போரின் இடையில் இரஷ்யா விலகிக் கொண்டது. - சரி
9. லெனின் நம்பிக்கைக்கு உரிய தோழர் லியான் ட்ராட்ஸ்கி - சரி
10. பன்னாட்டு கழகம் பாதுகாப்பு முறையை கொண்டு வந்தது - சரி
11. பன்னாட்டு கழகத்திற்கு பதில் ஐ.நா. சபை ஏற்படுத்தப்பட்டது. - சரி
12. ஹிட்லரின் ஆக்ரமிப்பு கொள்கை இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்தது. - சரி
13. 'மெய்ன் கேம்ப்' ஹிட்லரால் எழுதப்பட்டது - சரி
14. டாக்டர் காப் தலைமையில் ஸ்பானிய உள்நாட்டுப் போர் துவங்கியது - தவறு
15. பாரிஸ் அமைதி மாநாட்டில் கலந்து கொள்ளஜெர்மனி அழைக்கப்பட்டது. - தவறு
16. ஜெனரல் பிராங்கோ ஸ்பெயினின் சர்வதிகாரி - சரி
17. பன்னாட்டு கழகத்தில் அமெரிக்கா தீவிர உறுப்பினராக செயல்பட்டது - தவறு
18. ஸ்டாலின்கிராட் போர் ஜெர்மனிக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே நடைபெற்றது - சரி
19. அரசி 'சுசி' சீனாவை 1860 முதல் 1908 வரை ஆட்சி செய்தார் - சரி
20. **Dr**.சன்யாட்சென் மறைவுக்கு பின் மாசேதுங் கோமின்டாங் கட்சியின் தலைவரானார் - தவறு

JAIRAM COLLEGE

21. ஆசியாவில் ஐரோப்பியர்களால் குடியேற்றம் அமைக்கப் படாத ஒரே நாடு ஐப்பானாகும் - சரி
22. முதல் உலகப் போரின் போது ஐப்பான் சீனா மீது 21 கோரிக்கைகளை திணித்தது. - சரி
23. 1945 - ல் சான்பிரான்சிஸ்கோ நகரில் 51 நாடுகள் ஐ.நா. சாசனத்தில் கையெழுத்திட்டனர். சரி
24. ஐ.நா.பாதுகாப்பு அவையில் உள்ள நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் தற்காலிக உறுப்பினர்கள் இருவருக்கும் சிறப்பு இரத்து அதிகாரம் உண்டு - தவறு
25. கியூபா ஏவுகனை நெருக்கடியின் போது அமெரிக்கா தனது 7 -வது அணு ஆயுத கப்பலை அனுப்பியது . சரி
26. 1960 -ல் இந்திய அரசு பல தொடர் பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தி தாராளமயமாக்கல் & உலகமயமாக்கலை இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியது - சரி
27. 1960. ல் அமெரிக்காவும் சோவியத் யூனியனும் அணு ஆயுதசோதனை தடை ஒப்பந்தத்தை மேற்கொண்டன - தவறு

**IV** சரியான சொற்றொடரை கண்டறிக
இப் பயிற்சிக்கு புத்தகத்தில் உள்ள வினாக்களைப் படிக்கவும்.

**II** சிறு குறிப்பு வரைக
1. ரோகில்லா போர்(1774)
1.மராட்டிய பகுதிகளுக்கும் அயோத்தி பகுதிகளுக்கும் இடைப்பட்டபகுதி ரோகில்கண்ட்.
2. இதன் ஆட்சியாளர் ஹபிஸ் ரகமத் கான்.
3. அவர் மராட்டிய படையெடுப்பின் அச்சம் காரணமாக அயோத்தி நவாப்புடன் உடன்படிக்கை செய்து கொண்டாலும் படையெடுப்பு ஏதும் நடைபெறவில்லை.
4. ரகமத்கான் கட்டணத்தைக் கொடுப்பதில் காலதாமதம் செய்ததால் பிரிட்டிஷாரின் உதவியுடன் அயோத்தி நவாப் ரோகில்கண்ட் பகுதியைத் தாக்கினார்.

2.பிட் இந்தியச் சட்டம் 1784
1. ஒழுங்குமுறைச் சட்டத்தில் காணப்பட்ட குறைகளை நீக்க இளைய பிட் அவர்களால் கொண்டுவரப்பட்டது.
2. ஆறு உறுப்பினர்கள் கொண்ட கட்டுப்பாட்டு வாரியம் ஏற்படுத்தப்பட்டது.
3. இயக்குநர்கள் குழுவில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

3.மங்களூர் உடன்படிக்கை (1792)
1. இது இரண்டாம் மைசூர் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை.
2. இரு தரப்பிலும் கைப்பற்றப்பட்ட பகுதிகள் திரும்ப அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது.
3. போர்க் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

4.ஶ்ரீரங்கப் பட்டண உடன்படிக்கை
1. இது மூன்றாம் மைசூர் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை.
2. திப்பு தனது ஆட்சிப்பகுதியில் பாதியை பிரிட்டிஷாருக்கு விட்டுக் கொடுத்தார்.
3. போர் இழப்பீடாக மூன்று கோடியைகொடுப்பது என்றும் அதுவரை தனது இரு புதல்வர்களை பிணையாக ஆங்கிலேயரிடம் விட்டு வைப்பது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.
4. பிரிட்டிஷ் ஆட்சிப் பகுதியில் கூர்க்காக்கள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புகள் போருக்கு இட்டுச் சென்றது.

5.கூர்க்கா போர் (1814 - 16)
1. நேபாளம் ஒரு வலிமைமிக்க கூர்க்கா அரசாக 1768-ல் எழுச்சி பெற்றது.
2. ஹேஸ்டிங்ஸ் நேபாளத்தின் மீது போர் தொடுத்தார்.
3. போரின் இறுதியில் நேபாளத் தளபதி அமர்சிங் தாபா சரணடைந்தார்.

6.சதி
1. கணவரின் சிதையிலேயே விதவையைத் தள்ளி கொன்றுவிடும் வழக்கம் சதி எனப்பட்டது.
2. வங்காளத்தில் ஒரேயாண்டில் 800 நிகழ்வுகள் நடைபெற்றன.
3. 1829 ஆம் ஆண்டில் வில்லியம் பெண்டிங் பிரபுவால் சதி ஒழிக்கப்பட்டது.

7.மெக்காலே பிரபு
1. இவர் தலைமை ஆளுநரின் ஆலோசனை குழுவின் முதல் சட்ட உறுப்பினர்.
2. பெண்டிங் பிரபு இவரது தலைமையில் கல்விக் குழுவை நியமித்தார்.
3. மெக்காலே பிரபுவின் பரிந்துரையின்படி 1835 - ல் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் அறிவிக்கப்பட்டது.

8.காரன் வாலிஸ் பிரபுவின் காவல்துறை சீர்திருத்தம்
1. மாவட்ட நீதிபதியின் கட்டுப்பாட்டில் காவல் துறை இருந்தது.

JAI RAM COLLEGE

2. ஒவ்வொரு மாவட்டமும், தாணா என்ற பிரிவுகளாக பிரிக்கப்பட்டன.
3. அவை தரோகா எனப்பட்ட இந்திய அதிகாரியின் கட்டுப்பாட்டில் விடப்பட்டன.
4. அவருக்கு உதவியாக பல காவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

9.வுட் அறிக்கை
1. டல்ஹௌசி காலத்தில் சர் சார்லஸ்வுட் என்பவரால் கல்வித் துறை சீரமைக்கப்பட்டது.
2. 1854 - ல் இந்தியாவின் அறிவுப் பட்டயம் என்று அழைக்கப்பட்டது.
3. சர் சார்லஸ் கொள்கைப்படி தொடக்கக்கல்வி. இடைநிலைக் கல்வி .உயர்கல்வி ஆகியவற்றிற்கு செயல் திட்டத்தை வழங்கியது.
4. 1857 -ல் கல்கத்தா, பம்பாய், சென்னை பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன.

10. இரயத்துவாரி முறை
1. சர் தாமஸ் மன்றோ அவர்கள் சென்னையில் இரயத்துவாரி முறையை கொண்டு வந்தார்.
2. இம்முறை பீகார், பம்பாய், அஸ்ஸாம் பகுதியில் விரிவுபடுத்தப்பட்டது.
3. குடியானவர் நிலத்தின் உரிமையாளராக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.
4. குடியானவர் வரி செலுத்தும் காலம் வரை நிலத்திலிருந்து விலகமாட்டார்.
5. நிலவரி 20- முதல் 40 ஆண்டுகளாக மாற்றப்பட்டது.

11.பர்தா முறை
1, 19-20 ஆம் நூற்றாண்டுகளில் பர்தா அணியும் முறைக்கு எதிராக குரல்கள் எழுந்தன.
2. குடியானவர்களிடம் இப்பழக்கம் இல்லை.
3. தென்னிந்தியாவில் இப்பழக்கம் இல்லை.
4. தேசிய இயக்கத்தில் நிறைய பெண்கள் கலந்து கொண்டதால் எந்த ஒரு சட்டமும் இயற்றாமல் மறைந்து போனது.

12.பூலித் தேவர்
1. பூலித்தேவர் மறவர் பாளையக்காரர்களின் தலைவர்.
2. இவர் நெல் கட்டும் செவல் பாளையத்தைச் சேர்ந்தவர்.
3. இவர் கப்பம் கட்டாமல் நவாப்பிற்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டார்.
4. பூலித்தேவரையும் அவரது கூட்டாளிகளையும் அடக்கும்பொறுப்பை யூசுப்கான் என்ற கான்சாகிப்பிடம் பிரிட்டிஷார் ஒப்படைத்தனர்.

13.சர்ஜான் கிரடாக்
1. 1806 - வேலூர் கலகத்தின் போது சென்னை ஆளுனராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவின் படைத் தளபதி சர்ஜான் கிரடாக் என்பவர் தலைப்பாகையுடன் கூடிய புதிய சீருடையை அறிமுகப்படுத்தினார்.
2. இது ஐரோப்பியத் தொப்பியைப் போலவே இருந்தது.
3. காதணிகளை அணிவதும், சமயச்சின்னம் வைத்துக்கொள்வதும் தடைசெய்யப்பட்டன.
4. படைவீரர்கள் தங்கள் முகத்தை நன்றாக மழித்து மீசையை ஒழுங்குப்படுத்த வேண்டும்.

14. ராணிலட்சுமிபாய்
1. ஜான்சியைச் சேர்ந்த கங்காதரராவின் மனைவி லட்சுமி பாய்.
2. இவர் டல்ஹௌசியின் வாரிசு இழப்புக் கொள்கையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்.
3. ராணியும்,தாந்தியோ தோப்பும் சேர்ந்து குவாலியரைக் கைப்பற்றினர்.
4. 1858 ஜீன் 17-ல் ஜான்சி ராணி போர்களத்திலேயே வீரமரணம் அடைந்தார்.

15. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம்
1. லிட்டன்பிரபு ஆட்சி காலத்தில் இச்சட்டம் 1878 - ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது.
2. ஆங்கில அரசுக்கு எதிராக எக்கருத்துக்களையும் பிரசுரிக்கக் கூடாது.
3. இச்சட்டத்தினால் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக பொதுக் கருத்து உருவாயிற்று.

16. இல்பர்ட் மசோதா சர்ச்சை
1. இல்பர்ட் மசோதா ரிப்பன் பிரபுவால் 1884 - ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.
2. இந்திய சட்டப்படி ஒரு ஐரோப்பியர் மீதான வழக்கை ஐரோப்பிய நீதிபதி மட்டுமே விசாரிக்க முடியும். இந்திய நீதிபதி விசாரிக்க முடியாது.
3. இச்சட்டத்திலுள்ள இப்பாகுபாட்டை நீக்க ரிப்பன் பிரபு சி.பி.இல்பர்ட் மூலம் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். இம்மசோதாவை ஐரோப்பியர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

17சுவாமி விவேகானந்தர்
1. இவருடைய இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா. இவரின் குரு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்.
2. இவர் ஜாதிமுறையையும் , இந்து சமயத்தில் காணப்பட்ட சடங்குகளையும் எதிர்த்தார்.

JAIRAM COLLEGE

3. 1893 -ல் அமெரிக்காவில் உள்ள சிகாகோவில் நடைபெற்ற அனைத்துலக சமய மாநாட்டில் கலந்து கொண்டு இந்து சமயத்தின் புகழை உலகறியச் செய்தார்.
4. அவர் "மனிதனுக்கு செய்யும் சேவையே கடவுளுக்கு ஆற்றும் சேவை" என உரைத்தார். அவர் 1897 - ல் இராமகிருஷ்ண இயக்கத்தைத் தொடங்கினார்.

18. ஆரியசமாஜம்
1. ஆரிய சமாஜம் 1875 - ல் சுவாமி தயானந்த சரஸ்வதியால் தோற்றுவிக்கப்பட்டது.
2. இது கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்டது.
3. இவர் 1886 - ல் ஆங்கிலோ வேதப் பள்ளியை லாகூரில் நிறுவினார்.
4. வேதத்திற்குத் திரும்புங்கள் என்று இவர் கூறினார்.

19.தாதாபாய் நௌரோஜி
1. தாதாபாய் நௌரோஜி இந்தியாவின் முதுபெரும் மனிதர் என அழைக்கப்பட்டார்.
2. இவர் இந்தியாவிற்கான அதிகார பூர்வமற்ற தூதுவராக இங்கிலாந்தில் இருந்தார்.
3. பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் பொது மக்கள் அவையில் உறுப்பினரான முதல் இந்தியர் இவரே.
4. இவர் ஒரு மிதவாதியாவார்.

20.இந்திய தேசிய காங்கிரஸ்
1. இந்திய தேசிய காங்கிரஸ் 1885- ல் ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவரால் நிறுவப்பட்டது.
2. மும்பையில் நடைபெற்ற முதல் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் 72 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.
3. சமய,சாதி, மொழி மற்றும் பிராந்திய வேறுபாடுகள் இன்றி அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய இயக்கமாகும்.

21.சூரத் பிளவு
1. 1907 ம் ஆண்டு சூரத் காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் கட்சி இரண்டாக பிளவுபட்டது.
2. சுயராஜ்ஜியம் குறித்த கருத்து மோதல்களால் மிதவாதிகள், தீவிரவாதிகள் என பிளவு ஏற்பட்டது.
3. திலகர் தலைமையில் தீவிரவாதிகள் மாநாட்டை விட்டு வெளியேறினர்.

22.முஸ்லீம் லீக்
1. 1905 ம் ஆண்டு நவாப்சலிமுல்லா தலைமையில் தோற்றுவிக்கப்பட்டது.
2. ஆண்டுதோறும் மாநாடுகளை இவ்வியக்கம் நடத்தியது.
3. முஸ்லீம்களுக்கான தனித்தொகுதி பெற்றது, இதன் சாதனை ஆகும்.

23.வங்கப் பிரிவினை
1. 1906 - ல் கர்சன் பிரபு வங்காளத்தை கிழக்கு வங்காளம் மேற்கு வங்காளம் என இரண்டாக பிரித்தார்.
2. மக்கள் அந்நாளை துக்க தினமாக அனுசரித்தனர்.
3. இப்பிரிவினையின் எதிர்ப்பு சுதேசி இயக்கமாக வலுப்பெற்றது.

24.தண்டியாத்திரை 1930
1. மகாத்மா காந்தியும் 79 சீடர்களும் தண்டி கடற்கரையை நோக்கி சென்று அரசின் உப்பு சட்டங்களை மீறி சட்ட மறுப்பு இயக்கத்தை தொடங்கினார்.
2. விரைவில் இந்த இயக்கம் நாடு முழுவதும் பரவியது.
3. மாணவர்கள் தொழிலாளர்கள் குடியானவர்கள் பெண்கள் அனைவரும் பங்கேற்றனர்.
4. பிரிட்டிஷ் அரசாங்கம் முக்கிய தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்தது.

25. இந்தய தேசிய காங்கிரஸ்
1. சுபாஷ் சந்திரபோஸ் சிங்கப்பூரில் இந்திய தேசிய இராணுவம் அமைத்து அதன் தளபதியாக பொறுப்பேற்றார்.
2. அவர் ஜெய்ஹிந்த், டெல்லிசலோ என முழக்கமிட்டு வீரர்களை உற்சாகப்படுத்தினார்.
3. இந்திய தேசிய இராணுவத்தில் சுபாஷ் பிரிவு, காந்தி பிரிவு நேரு பிரிவு மற்றும் ராணி லட்சுமிபாய் பெண்கள் பிரிவு என பிரிக்கப்பட்டிருந்தது.

26.பேரரசியின் அறிக்கை (அ)விக்டோரியா அரசியின் அறிக்கை (1858)
1. இவ்வறிக்கையை அலகாபாத் நகரில் கானிங் பிரபுவால் அறிவிக்கப்பட்டது.
2. பேரரசியின் அறிக்கை இந்திய மக்களின் "மேக்னா கார்ட்டா" என்று அழைக்கப்பட்டது.
3. இந்தியாவில் வணிக குழுவின் ஆட்சி முடிவுக்கு வந்ததையும் அரசியார் ஆட்சி பொறுப்பை தாமே மேற்கொண்டதையும் இந்த அறிக்கை குறிப்பிட்டது.

27.பஞ்சசீலம்
1. சமாதான சக வாழ்வுக்கான ஐந்து கொள்கைகள் ஜவஹர்லால் நேருவால் வெளியிடப்பட்டது.
2. ஒருவருக்கொருவர் பிறரது பிரதேச ஒருமைப்பாட்டையும் இறையாண்மையும் மதித்து நடப்பது.
3. ஆக்கிரமிப்பை விலக்கல்.
4. பிறநாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாதிருத்தல்
5. சமத்துவம் மற்றும் பரஸ்பர உதவி.

JAIRAM COLLEGE

28.மறுமலர்ச்சி

1. மறுமலர்ச்சி என்ற சொல்லுக்கு மறுபிறப்பு அல்லது மீட்சி என்பது பொருள்.
2. இடைக்காலத்திற்கும் . தற்காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ஐரேப்பாவில் நடைபெற்ற மாற்றங்களை குறிப்பிடுகிறது.
3. இக்காலத்தில் இலக்கியம் , கலை. அறிவியல் ஆகிய துறைகளில் புதியதொரு மீட்சி காணப்பட்டது.

29.மாலுமி ஹென்றி

1. கடலாய்வின் முதலாவது தொடர் பயணங்களை மேற்கொண்ட நாடு போர்ச்சுக்கல்.
2. அந்நாட்டின் ஆட்சியாளரான ஹென்றி மாலுமி அரசர் என அழைக்கப்பட்டார்.
3. அவரது முயற்சிகளின் விளைவாக மெடிரா மற்றும் அசோர் தீவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

30.இயேசு சபை

1. 1534 - ல் இக்னேசியஸ் லயோலா என்பவரால் இயேசு சபை தொடங்கப்பட்டது.
2. இச்சபையின் உறுப்பினர்கள் ஜெசூட்டுகள் என்று அழைக்கப்பட்டனர்.
3. திருச்சபையின் இழந்தபுகழை மீட்பதும், சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதும் இதன் பணிகளாகும்.
4. உலகின் பல பகுதிகளிலும் பள்ளிகள் கல்லூரிகள் நிறுவப்பட்டன.

31.பாஸ்டன் தேனீர் விருந்து

1. அமெரிக்க சுதந்திரப் போரின் போது 1773 - ல் தேயிலை இறக்கு மதிக்கு வரிவிதிக்கும் தேயிலைச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
2. அமெரிக்கர்கள் இதனை எதிர்த்தனர்.
3. செவ்விந்தியர் போல வேடமிட்ட இவர்கள் பாஸ்டன் துறைமுகத்திலிருந்த தேயிலைப் பெட்டிகளை கடலில் வீசினர்.
4. 1773 - ல் டிசம்பர் 14 - ல் நடைபெற்ற இந்நிகழ்ச்சி பாஸ்டன் தேனீர் விருந்து என அழைக்கப்படுகிறது.

32.ரூசோ

1. ரூசோ எழுதிய "சமூக ஒப்பந்தம்" என்ற நூல் பிரெஞ்சுப் புரட்சியின் பைபிள் என்று அழைக்கப்பட்டது.
2. இதில் அரசின் அதிகாரம் மக்களிடம் உள்ளது என்று கூறினார்.
3. மனிதன் சுதந்திரமாகப் பிறக்கிறான். ஆனால் சங்கிலியால் பிணைக்கப்படுகிறான் என்ற வாசகம் பிரெஞ்சு மக்களிடையே புரட்சி உணர்வைத் தூண்டியது.

33.ஜான் மெக் ஆடம்

1. 18 -ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் இவர் கெட்டியான மேற்பரப்பு கொண்ட சாலையை அமைத்தார்.
2. சேற்றுக்குப் பதிலாக தார் கலவை கொண்ட கற்கள் பயன்படுத்தப்பட்டன.
3. இங்கிலாந்தின் இந்த வழிமுறையை பிரான்சும் பின்பற்றியது.
4. அரசின் ஆதரவுடன் நாடு முழுவதும் பெருவழித்தடங்கள் அமைக்கப்பட்டன.

34.வெர்சேல்ஸ் உடன்படிக்கை

1. 1919 - ல் ஜீன் - 28 ல் ஜெர்மனி வெர்சேல்ஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.
2. இவ்வுடன்படிக்கை தம் மீது திணிக்கப்பட்ட உடன்படிக்கை என ஜெர்மனி நினைத்தது.
3. இதனை எதிர்க்கும் திறன் ஜெர்மனிக்கு இல்லை.
4. வெற்றிபெற்ற நாடுகளுக்கு ஏராளமான போர் இழப்பீட்டைத் தர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

35.குருதி ஞாயிறு

1. 1905 -ல் செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கைச் சார்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்
2. இவர்கள் சார் மன்னனின் மாளிகைக்குச் சென்று தங்கள் குறைகளைப் போக்குமாறு விண்ணப்பம் கொடுத்தனர்.
3. இந்நிகழ்வு 1905 - ல் ஜனவரி 22- ல் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. எனவே இது குருதி ஞாயிறு என அழைக்கப்படுகிறது.

36. ரோம் பெர்லின் டோக்கியோ அச்சு

1. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளின் கட்டிணைவே ரோம் - பெர்லின் - டோக்கியோ அச்சு எனப்படுகிறது.
2. இங்கிலாந்து, பிரான்சு , ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு எதிராக இது அமைக்கப்பட்டது.
3. இதுவே இரண்டாம் உலகப் போருக்கு இட்டுச் சென்றது.

SAIRAM COLLEGE

37.பேரரசுக் கொள்கை

1. வலிமையான நாடு எளிய நாட்டை போரில் வென்று தன் நாட்டுடன் இணைத்துக் கொள்வது மற்றும் ஆதிக்கம் செய்வது பேரரசுக் கொள்கை ஆகும்.
2. இரண்டாம் உலகப் போருக்கு பேரரசுக் கொள்கை ஒரு முக்கிய காரணம் ஆயிற்று.
3. நேச நாடுகளை விட ஜெர்மனியும் இத்தாலியும் பேரரசு ஆதிக்கக் கொள்கையை அதிகம் பெற்று இருந்தன.

38.மெய்ஜி முன்னிலை மீட்சி

1. இருநூறு ஆண்டுகளாக ஜப்பான் தனித்திருக்கும் கொள்கையை பின்பற்றி வந்தது.
2. 1853 - ல் அமெரிக்காவைச் சேர்ந்த கம்மொடர் பெர்ரி இதனை உடைத்தெறிந்தார்.
3. ஜப்பானிய அரசிடம் மீண்டும் முழு அதிகாரம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டது.
4. இதுவே மெய்ஜி முன்னிலை மீட்சி எனப்பட்டது.

39.பாதுகாப்பு சபை

1. ஐ.நா.வின் முக்கிய அமைப்பான பாதுகாப்பு சபையில் 15 உறுப்பினர்கள் உள்ளனர்.
2. இதில் நிரந்தர உறுப்பு நாடுகளாக அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்சு மற்றும் சீனா ஆகிய நாடுகள் உள்ளன. இந்நாடுகளுக்கு சிறப்பு ரத்து அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
3. உலகில் அமைதியையும் , பாதுகாப்பையும் உறுதி செய்வது இதன் பணியாகும்.
4. ஐ.நா.சட்ட திட்டங்களை மீறும் நாடுகளுக்கு பொருளாதார மற்றும் ராஜதந்திர ரீதியான நடவடிக்கையை பாதுகாப்பு மேற்கொள்ளும்.

40. நேட்டோ

1. 1949- ம் ஆண்டு மேற்கு ஐரோப்பிய பகுதியில் கம்யூனிசம் பரவாமல் தடுப்பதற்காக அமெரிக்காவினால் ஏற்படுத்தப்பட்டது இது ஒரு இராணுவ ஒப்பந்தமாகும்.
2. இவ்வமைப்பின் உறுப்பு நாடுகளை வேறு நாடுகள் தாக்கினால் மற்ற உறுப்பு நாடுகள் இராணுவ உதவிக்கு வரும்.
3. சோவியத் யூனியனுக்கு எதிராக இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

41. கெடுபிடிப்போர்

1. கெடுபிடிப்போரில் ஈடுபட்ட இரு நாடுகள் அமெரிக்கா மற்றும் ரஷ்யாவாகும்.
2. அமெரிக்காவின் தலைமையிலான மேற்கத்திய நாடுகளுக்கும், ரஷ்யாவின் தலைமையிலான கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து பூசல் கெடுபிடிப் போர் எனப்பட்டது.
3. பெர்னாட் பரூச் என்பவரால் தான் முதன் முதலில் கெடுபிடிப் போர் என்ற சொல் பயன்படுத்தப்பட்டது.

42. அணு ஆயுத குறைப்பு

1. வருங்காலத்தில் அணு ஆயுதப்போர் ஏற்படும் அச்சத்தை தவிர்ப்பதற்காக அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.
2. இந்த ஒப்பந்தம் இராணுவ ஆயுதங்களை தயாரிக்கவும் அணு சக்தி பயன்படுத்துவதையும் தடை செய்தது.
3. இவ்வொப்பந்தம் சிடிபிடி எனப்படும்.

## *ஆறு மதிப்பெண்கள் வினாக்கள்*

**III** 1.ஒழுங்கு முறை சட்டத்தின் முக்கிய விதிமுறைகளை பற்றி விவாதிக்க.

1. இயக்குநர்கள் குழுவிலுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் ஓராண்டிலிருந்து நான்கு ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது.
2. வங்காள ஆளுநர் இனி வில்லியம் கோட்டையின் தலைமை ஆளுநர் என அழைக்கப்பட்டார்.
3. தலைமை ஆளுநருக்கு உதவியாக 4 பேர் கொண்ட ஆலோசனைக்குழு ஏற்படுத்தப்பட்டது. தலைமை ஆளுநருக்கு முடிவு செய்யும் வாக்குரிமை வழங்கப்பட்டது.
4. தலைமை ஆளுநர் மற்றும் ஆலோசனைக் குழுவிற்கு போர், அமைதி, உடன்பாடு போன்ற விவகாரங்களில் மற்ற மாகாணங்களை கட்டுப்படுத்த அதிகாரம் வழங்கப்பட்டது.
5. கல்கத்தாவில் ஒரு உச்ச நீதி மன்றம் ஏற்படுத்த இச்சட்டம் வழி வகை செய்தது.
6. தலைமை ஆளுநர் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பரிசுப் பொருட்கள் பெறுவதற்கு இச்சட்டம் தடை விதித்தது.

JAIRAM COLLEGE

2.காரன் வாலிஸ் பிரபுவின் நீதித்துறை சீர்திருத்தங்களை எழுதுக.

1. சதர் திவானிஅதாலத், சதர் நிசாமத் அதாலத் என்ற இரு நீதிமன்றங்கள் கல்கத்தாவில் செயல்பட்டு வந்தன.
2. கல்கத்தா , டாக்கா, மூர்ஷிதாபாத் ,பாட்னா ஆகிய 4 மாகாண மேல் முறையீட்டு நீதி மன்றங்கள் இருந்தன.இவற்றில் மூன்று ஐரோப்பிய நீதிபதிகள் இந்திய ஆலோசனையாளர்களின் உதவியுடன் செயல்பட்டனர்.
3. மாவட்டந் தோறும் ஒரு நீதி மன்றம் ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட மற்றும் நகர நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் ஒரு ஐரோப்பிய நீதிபதியின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது.
4. நீதிதுறையின் கீழ்மட்டத்தில் இந்திய நீதிபதிகள் அல்லது முன்சீப்கள் நியமிக்கப்பட்டனர்.
5. குற்றவியலுக்கு இஸ்லாமிய சட்டமும், உரிமையியல் வழக்குகளுக்கு இந்து சட்டங்கள் பின்பற்றப்பட்டன. உறுப்புகளை சிதைத்தல், துன்புறுத்தி விசாரித்தல் போன்ற காட்டுமிராண்டித்தனமான தண்டனைகளை ஒழித்தார்.
6. தனது சக பணியாளரான சர்ஜார்ஜ் பார்லோ என்பவரின் உதவியுடன் முழுமையான சட்டத்தொகுப்பை உருவாக்கினார்.

3. துணைப்படைத் திட்டத்தின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

1. துணைப்படை ஒப்பந்தம் செய்து கொள்ளும் இந்திய அரசர் தனது ஆட்சிப் பகுதியில் பிரிட்டிஷ் படையை வைத்து பராமரிக்க வேண்டும்.
2. அத்தகைய இந்திய அரசு “பாதுகாக்கப்பட்ட அரசு” என்றும் பிரிட்டிஷ் அரசு “தலைமை அரசு” என அழைக்கப்பட்டது.
3. படைகளுக்கு ஆகும் செலவினை சரிகட்ட ஒரு தொகை அல்லது ஒரு நிலப் பகுதியை பிரிட்டிஷாருக்கு கொடுக்க வேண்டும்.
4. பாதுகாக்கப்பட்ட அரசு ஆங்கிலேயர் தவிர வேறு ஐரோப்பிய அரசுகளுடனான உறவுகளைத் துண்டிக்க வேண்டும்.
5. ஒரு பிரிட்டிஷ் தூதுவரை தனது அரசவையில் வைத்துக் கொள்ள வேண்டும். பிரிட்டிஷ் அரசின் அனுமதியின்றி பிற ஐரோப்பியர்களை பணியில் அமர்த்தக் கூடாது.
6. பாதுகாக்கப்பட்ட அரசின் உள் விவகாரங்களில் தலைமை அரசு தலையிடக் கூடாது.

4.மராட்டியரின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

1. திறமையான தலைமை இல்லாதது. படை வலிமை இல்லாத
2. மராட்டியர்களிடையே நிலவிய உட்பூசல்கள் மற்றும் ஒற்றுமையின்மை.
3. தாங்கள் வென்ற பகுதியின் ஆதரவைப் பெறத் தவறியது.
4. மற்ற அரசர்கள் நவாப்புடன் நட்புறவு இல்லை.
5. பிரிட்டிஷாரின் அரசியல் மற்றும் ராஜதந்திரத்தை சரியாக மதிப்பிடத் தவறியது.

5.பிண்டாரிகளை ஒழிக்க ஹேஸ்டிங்ஸ் பிரபு மேற்கொண்ட நடவடிக்கைகள்

1. ராஜபுதனம், மத்திய மாகாணங்கள் ஆகியன பிண்டாரிகளின் முக்கிய
2. இருப்பிடமாகும்.
3. கொள்ளையடிப்பதே அவர்களது அடிப்படைத் தொழிலாகும்.பிண்டாரிகள் தலைவர்கள் வாசில் முகமது சிட்டு, கரிம் கான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
4. ஹேஸ்டிங்ஸ் பிரபு பிண்டாரிகளை ஒடுக்குவதற்கு நாற்புறமும் படைகளை அனுப்பினார்.
5. வடக்கில் இப்படைக்கு ஹேஸ்டிங்சே தலைமை வகித்தார். 1818 ஆம் ஆண்டில் பிண்டாரிகள் முழுவதும் ஒடுக்கப்பட்டனர்.
6. கோரக்பூர் மாவட்டத்தில் கரீம்கானுக்கு சிறிய பண்ணை கொடுக்கப்பட்டது.வாசில் முகமது பிரிட்டிஷாரின் சிறையில் தற்கொலை செய்து கொண்டார்.
7. சிட்டு காடுகளுக்கு தப்பியோடினார் அங்கு புலிக்கு இரையானார்.1824 - ல் பிண்டாரிகளின் தொல்லை முழுவதுமாக முடிவுக்கு வந்தது.

6.ஜாலியன் வாலாபாக் படுகொலை (ஏப்ரல் 13 1919)

1. பஞ்சாப் பகுதியில் பொது கூட்டங்கள் நடைபெற ஜெனரல் டயர் தடைவிதித்தார்.
2. ஜாலியன் வாலாபாக் பூங்காவில் ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.
3. ஆங்கிலத் தளபதி ஜெனரல் டயர் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி கூட்டத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்.
4. இதனால் 379 பேர் கொல்லப்பட்டனர்.1137 பேர் படுகாயமடைந்தனர்.
5. இப்படுகொலையை எதிர்த்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.
6. ரவீந்திரநாத் தாகூர் "நைட்" பட்டத்தை துறந்தார்.

JAIRAM COLLEGE

7.ஒத்துழையாமை இயக்கம்

1. ஒத்துழையாமை இயக்கம் 1920-ல் காந்தியடிகளால் தொடங்கப்பட்டது. குடியானவர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் பெண்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.
2. அனைத்து பிரிவினரும் பங்கேற்ற முதலாவது மக்கள் இயக்கமாகும்.
3. இந்தியாவில் தேசியம் பரவ வழி வகுத்தது.
4. கிலாபத் இயக்கம் ஒன்றிணைக்கப்பட்டதால் இந்து முஸ்லீம் ஒற்றுமையின் உச்சக்கட்டமாக இது நிகழ்ந்தது.
5. இந்திய மக்களுக்கு எத்தகைய துன்பத்தையும் தாங்கும் சக்தி உண்டு என்பதையும் இது எடுத்துக் காட்டியது.

8.வ.உ.சியின் பங்கு

1. இவர் பாலகங்காதர திலகரின் சீடர். தூத்துக்குடியில் பவளஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை முன்னின்று நடத்தினார்.
2. 1906 -ல் தூத்துக்குடியல் சுதேசி நீராவிக் கப்பல் கழகத்தை நிறுவனார். எனவே அவர் கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்பட்டார்.
3. சிறைக்குள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார்.
4. செக்கிழுக்கும் கொடுமைக்கு ஆளானதால் செக்கிழுத்த செம்மல் என அழைக்கப்பட்டார்.

9.நீதிக்கட்சியின் கல்வி சீர்திருத்தங்கள்

1. சென்னையில் முதன் முதலாக கட்டணமில்லாத கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
2. மீனவ குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர்களுக்கு மீன் வளத்துறை மூலம் இலவச மீன் பிடிப்பு பயிற்சி அளித்தது.
3. சென்னையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி பள்ளிகளில் இலவச மதிய உணவு அளிக்கப்பட்டது.
4. பெண்கல்வியினை ஊக்குவித்தது. ஆயுர்வேதா, சித்தா. யுனானி மருத்துவக் கல்விக்கு ஊக்கம் அளித்தது.
5. ஆந்திரபல்கலைக் கழகமும், அண்ணாமலை பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டன.

10.இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்

1. ஜனவரி 26 1950 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.
2. அரசியலமைப்பானது, வயது வந்தோர், அனைவருக்கும் வாக்குரிமை, பாராளுமன்றமுறை, அடிப்படை உரிமைகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கியது.
3. மத்தியில் ஒரு முக தன்மையும் கூட்டாச்சி தன்மையும் கலந்த ஒரு நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
4. அரசாங்கத்தின் அதிகாரங்கள் மத்திய மாநில பொது என மூன்று பட்டியல்களில் கொடுக்கப்பட்டுள்ளன.
5. ஜனாதிபதி நாட்டின் அரசியலமைப்புத் தலைவர். பிரதமர் நிர்வாகத் தலைவர்.

11.1833 -ம் ஆண்டு பட்டயச் சட்டம்

1. ஆங்கிலேயக் கிழக்கிந்திய வணிகக்குழு இந்தியாவில் தனது வாணிகத்தை தொடர அனுமதிக்கப்படவில்லை.
2. அது பிரிட்டிஷ் அரசரின் அரசியல் முகவராக மட்டும் செயல்படும் என்று தெளிவாக்கப்பட்டது.
3. வில்லியம் கோட்டையின் தலைமை ஆளுநர் இனிமேல் இந்தியாவில் தலைமை ஆளுநர் என்று அழைக்கப்படுவார்.
4. இதனால் இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் என்று கூட சொல்லலாம்.
5. பொது ஆட்சிப் பணிகள் இந்தியமையமாக்கப்படுவதற்கு இச்சட்டம் அடிகோலியது.
6. தலைமை அளுநரின் ஆலோசனைக் குழுவில் சட்ட உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

12.வாரிசு இழப்பு கொள்கையின் கருத்து மற்றும் நடைமுறை பற்றி எழுதுக.

1. இந்து சட்டம்

இந்து சட்டத்தின் படி ஒருவனுக்கு ஆண் வாரிசு இல்லை எனில் ஒரு புதல்வரை தத்து எடுத்துக் கொண்டு தனது சொத்துக்களுக்கு வாரிசு ஆக்கலாம்.

ஆனால் பாதுகாக்கப்பட்ட இந்து அரசர் ஒரு ஆண்வாரிசு தத்து எடுத்துக் கொள்வதற்கு தலைமை அரசின் அனுமதி பெற வேண்டும்.

2. டல்ஹௌசியின் வாதம்

இவரது கொள்கையின்படி பிரிட்டிஷ் அரசு அனுமதி மறுத்தால் அந்த அரசருக்கு வாரிசு இல்லாத நிலைமை ஏற்படும். எனவே அந்த ஆட்சிப்பகுதியை பிரிட்டிஷ் அரசு தங்களுடன் இணைத்துக் கொள்ளும். டல்ஹௌசி இந்த கொள்கை யால் பல இந்து அரசர்கள் பாதிக்கப்பட்டனர்.

3.இணைக்கப்பட்ட நாடுகள்

1848 - ல் சதாரா இணைக்கப்பட்டது. 1854 - ல் ஜான்சி, நாக்பூர் இணைக்கப்பட்டது.1861 -ல் புதிய மாகாணம் உருவாக்கப்பட்டது.

JAIRAM COLLEGE

13.நிலையான நிலவரித் திட்டம் சிறப்புக் கூறுகள்

1. நிலையான நிலவரி திட்டம் காரன்வாலிஸ் பிரபுவால் கொண்டுவரப்பட்டது.
2. நிலத்தை உழுத குடியானவர்கள் குத்தகைகளாக கருதப்படுவார்.
3. ஆட்சித்துறை, நீதித்துறை பொறுப்புகளில் ஜமீன்தார்கள் விடுவிக்கப்பட்டனர்.
4. வரி நிலையாக நிர்ணயிக்கப்பட்டு எந்த சூழ்நிலையிலும் உயர்த்தவில்லை. வரி செலுத்தம் காலம் வரை ஜமீன்தார்கள் நிலத்திற்கு உரிமையாளர் ஆவர்.
5. வருவாயில் 89 ஆங்கிலேயருக்கும் மீதி ஜமீன்தாருக்கும் கொடுக்கப்பட்டது.

14.வுட் அறிக்கை பற்றி குறிப்பு வரைக

1. 1854 -ல் டல்ஹௌசி காலத்தில் சார்லஸ் வுட் கல்வி அறிக்கை வெளியிடப்பட்டது.
2. 5 மாநிலங்களில் கல்வித்துறை ஏற்படுத்தப்பட்டது.
3. தனியார் பங்களிப்பை ஊக்குவிக்க கல்வித்துறை மானிய உதவி வழங்கப்பட்டது.
4. வுட் கல்வி அறிக்கை இந்தியாவின் அறிவுப்பட்டயம் என கருதப்பட்டது. பெண்கல்வி, தொழில்கல்வி, ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் நிறுவ வலியுறுத்தியது.
5. சென்னை, பம்பாய் கல்கத்தாவில் பல்கலைக்கழகம் நிறுவ அடித்தளம் இட்டது.

14.வேலூர் கலகத்தின் போக்கு

1. இராணுவ அதிகாரிகள் கொல்லப்படுதல். 1806 -ல் ஜீலை 10- ல் விடியற்காலை 1 மற்றும் 23 ஆம் படைப்பிரிவைச் சார்ந்த இந்திய சிப்பாய்கள் வேலூர் கலகத்தை தோற்றுவித்தனர்.
2. மேலும் 23 -ம் படைப்பிரிவு கர்னல் "மிகேரஸ்" கொல்லப்பட்டார்.
3. இதுபோல 12 அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.
4. இராணுவ அதிகாரி மேஜர் ஆம்ஸ்ட்ராங் கொல்லப்பட்டார்.
5. மேஜர் கூட்ஸ் ராணிப்பேட்டையில் இருந்த இராணுவத் தளபதி கர்னல் ஜில்லெஸ்பியிடம், புரட்சியைப் பற்றித் தெரிவித்தார்.
6. கர்னல் ஜில்லெஸ்பி இக்கலகத்தை அடக்கினார்.

16. 1857- ஆம் ஆண்டு கலகத்தின் விளைவுகளை ஆய்க.

1. இந்திய ஆட்சி முறையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன.
2. கிழக்கிந்திய வணிகக்குழுவின் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டன.
3. 1858 - ஆம் ஆண்டு பேரரசியின் அறிக்கைப்படி பிரிட்டிஷாரின் நேரடி ஆட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
4. 1858 - ஆம் ஆண்டு அலகாபாத்தில் கானிங் பிரபு இங்கிலாந்து அரசியாரின் அறிக்கையை வெளியிட்டார்.
5. பேரரசின் அறிக்கை "மேக்னா கார்ட்டா" என்று அழைக்கப்பட்டது.
6. இந்திய தலைமை ஆளுநர் அரசப் பிரதிநிதி அல்லது வைஸ்ராய் என அழைக்கப்பட்டார்.

17.உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றி விவரிக்க.

1. ரிப்பன் பிரபு நகரங்களில் நகரசபை குழுக்கள் , தாலுக்காக்கள் மற்றும் கிராமங்களில் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தினார்.
2. தல சுய ஆட்சி ரிப்பன் பிரபுவின் மகத்தான சாதனையாகும்.
3. இவர் நாட்டில் காணும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடித்தளமிட்டார்.
4. இதனால் பயனடைந்த மக்கள் " ரிப்பன் எங்கள் அப்பன்" என்று போற்றினர்.
5. சுகாதாரம் , கழிவுநீர் சுத்தகரிப்பு குடிநீர் வழங்குதல், தொடக்கக் கல்வி போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி நிர்வகிக்கும் பொறுப்பை உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்தார்.
6. உள்ளாட்சி கழக உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்தல் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

18.இராமலிங்க அடிகளாரின் கொள்கைகள்

1. 19-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வாழ்ந்த சமயத் தலைவர்களின் தலை சிறந்தவர் இராமலிங்க அடிகள்.
2. தனது தத்துவங்களைப் பரப்ப 1865 - ல் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.
3. மக்களிடையே அன்பையும் கருணையையும் போதித்தவர்.
4. கடவுளை ஜோதி வடிவமாக வழிபடலாம் என்று அவர்களுக்கு எடுத்துக் கூறினார்.
5. மனுமுறை கண்ட வாசகம் திருவருட்பா போன்ற நால்களை அவர் இயற்றினார்.
6. சாதிமத பேதமற்ற சமுதாயம் அவர் கனவு.

JAIRAM COLLEGE

19.மிதவாதிகளின் கோரிக்கைகள் குறித்து ஒரு குறிப்பு வரைக

1. சட்டசபைகளை விரிவாக்குதல்.
2. ICS தேர்வுகளை ஒரே சமயத்தில் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நடத்துதல்.
3. நிர்வாகத் துறையிலிருந்து நீதித்துறையைப் பிரித்தல்.
4. ராணுவச் செலவுகளைக் குறைத்தல். உப்புவரி சர்க்கரை வரியை ஒழித்தல்.

20.இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றியதை விவரி.

1. 1892 - ஆம் ஆண்டு இந்திய கவுன்சில் சட்டப்படி சட்டசபை விரிவாக்கம் தவிர எந்த வெற்றியும் மிதவாதிகள் பெறவில்லை.
2. நிறவெறி காரணமாக தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் மோசமாக பாதிக்கப்பட்டனர்.
3. 1904 -05 ஆம் ஆண்டு சிறிய நாடான ஜப்பான் ரஷ்யாவை வென்றது.இதனால் பிரிட்டனை இந்தியர்களால் வெல்ல முடியும் என்ற ஊக்கம் ஏற்பட்டது.
4. மக்களின் பொருளாதார நிலைமை மேலும் மோசமானது

21.போருக்குப் பிந்தைய ஜப்பானில் ஏற்பட்ட வளர்ச்சி

1. இரண்டாம் உலகப் போர் முடிந்த பின் ஜப்பான் நாடு மெக் ஆர்தரின் வசம் விடப்பட்டது.
2. 1947 ஆம் ஆண்டு ஜப்பானில் புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது.
3. அமெரிக்கா,ஜப்பானுக்கு அதி நவீன தொழில் நுட்பங்கள், பொருளாதார உதவி போன்றவைகளை அளித்து ஜப்பானை எழுச்சிப் பெற செய்தது.
4. பொருள் உற்பத்தியாளர்கள், வினியோகஸ்தர்கள் மற்றும் "கெய்ரட்சு" எனப்பட்ட வங்கியாளர்கள் ஆகியோரின் முயற்சியால் ஜப்பான் வளர்ச்சியடைந்தது.
5. வளர்ச்சிபெற்ற நாடுகளின் குழுவான G - 8 -ல் ஜப்பான் இடம் பெற்றுள்ளது.

22.இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் யாவை?

1. இரண்டாம் உலகப் போரால் 13 மில்லியன் ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டனர்.
2. 17 மில்லியன் சிவிலியன்கள் கொல்லப்பட்டனர்.
3. குடியேற்றங்கள் விடுதலை பெற்றன.
4. கெடுபிடிபோர் என்ற கோட்பாட்டுப் போர் அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் இடையே தொடங்கியது.
5. அமெரிக்காவும், சோவியத் யூனியனும் வல்லரசு நாடுகளாயின.

23. ஐ.நா. சபையின் நோக்கங்கள் யாவை?

1. பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரித்தல்.
2. நாடுகளுக்கிடையே நட்புறவையும், அமைதியையும் ஏற்படுத்துதல்.
3. அனைத்து நாடுகளுக்கும் சம உரிமைகளையும்,சுய நிர்ணய உரிமைகளையும் வழங்குதல்.
4. பன்னாட்டு ஒத்துழைப்புடன் பொருளாதார. சமூக பன்பாட்டு மற்றும் மனிதகுல பிரச்சினைகளைத் தீர்த்தல்.
5. மனித உரிமைகள், கண்ணியம் மற்றும் சுதந்திரத்தை போற்றி வளர்த்தல்
6. எந்த ஒரு நாட்டின் உள்விவகாரங்களிலும் நேரடியாக தலையிடாமை.

24.அணு ஆயுதப்பரவல் தடை சட்டத்தின் முக்கிய கூறுகள் யாவை?

1. வருங்காலத்தில் அணுஆயுதப் போர் ஏற்படாமல் இருக்க "அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் " ஏற்படுத்தப்பட்டது.
2. அணுபயன்பாட்டை சிவில் பயன்பாட்டிற்கு பயன்படுத்தாமல், ராணுவ ஆயுதங்கள் தயாரிக்க பயன்படுத்தும் நாடுகள் மீது நடவடிக்கை எடுத்தல்.
3. அணு ஆயுதங்கள் அற்ற பகுதி என்ற கருத்தை ஏற்க அனைத்து நாடுகளையும் வற்புறுத்தல்.
4. நாடுகள் அனைத்தும் இனி அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை என உறுதியளித்தல்.
5. அணு ஆயுத திட்ட நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

25.சமய சீர்திருத்தத்தின் விளைவுகள்

1. கிறித்துவ சமயத்தில், கத்தோலிக்கர்கள், ப்ராட்டஸ்டண்டுகள் என இரு பிரிவினர் இருந்தனர்.
2. இவர்களுள் ஏற்பட்ட சமய வேற்றுமைகளால் ஜெர்மனியிலும் ஐரோப்பியாவிலும் போர்கள் தோன்றின.
3. கலை. இலக்கியம் அறிவியல் வளர்ந்தன.
4. திருச்சபையில் கடைப்பிடிக்கப்பட்ட ஜனநாயக முறைகளால் தேசியம் மற்றும் ஜனநாயகக் கருத்துக்கள் வளர்ந்தன.

JAIRAM COLLEGE

5. மக்களிடையே ப்ராட்டஸ்டண்ட் சமயமும், எதிர் சமய சீர்திருத்த இயக்கமும் விரைவாகப் பரவியதால் திருச்சபை தூய்மையாக்கப்பட்டது.
6. சமய சீர்திருத்தத்தின் விளைவாக இரு பிரிவினரிடமும் ஒழுக்க நெறிகள் வளர்ந்தன.

26.அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணம்

பிரிட்டிஷ் அரசின் குடியேற்றக் கொள்கை

1. பிரிட்டிஷ் அரசு குடியேற்ற வாணிபக் கொள்கையைக் கடைபிடித்தது.
2. குடியேற்றங்கள் தாய்நாட்டின் நலன்களுக்காகவே அமைந்தது.
3. குடியேற்றங்கள் தங்கள் பொருட்களை பிரிட்டிஷ் கப்பல்களில் தான் கொண்டு செல்ல வேண்டும் என கட்டாயம் செய்யப்பட்டது..

நாவாய் சட்டங்கள்

குடியேற்றங்களை கட்டுப்படுத்தும் நாவாய் சட்டங்களை பிரிட்டிஷ் அரசு இயற்றியது.

வெல்லப்பாகுச் சட்டம்

1. குடியேற்றங்கள் வெல்லப்பாகு, சர்க்கரையை இறக்குமதி செய்தால் அதிகவரி செலுத்த வேண்டும்..
2. 1732 - ல் இயற்றப்பட்ட தொப்பி சட்டம் இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது. எனவே தாய் நாட்டுக்கும் குடியேற்றங்களுக்கும் வெறுப்பு தோன்றி போர் ஏற்பட்டது.

27.பிரெஞ்சுபுரட்சியில் சிந்தனையாளர்களின் பங்கு

1. மாண்டெஸ்க்யூ - அவர் தனது சட்டத்தின் சாரம் என்ற நூலில் நீதி, நிர்வாகம், சட்டம் என்ற மூன்று துறைகளும் தனித்தனியாக பிரிக்க வேண்டும் என்று கூறினர்.
2. ரூசோ - ரூசோ எழுதிய"சமூக ஒப்பந்தம்" என்ற நூல் பிரெஞ்சு புரட்சியின் பைபிள் என்று அழைக்கப்பட்டது. அரசின் உண்மையான அதிகாரம் மக்களிடம் உள்ளது என்று கூறினார்.
3. வால்டேர் - மூட பழக்க வழக்கங்களை சாடினார்.

28. தொழிற்புரட்சிக்கான காரணங்கள்

1. இங்கிலாந்தின் சாதகமான புவியியல் அமைப்பு.
2. வேளாண்மை புரட்சியின் தாக்கம்.
3. தொழில் தொடங்குபவரின் ஆர்வம்.
4. இங்கிலாந்தில் ஏற்பட்ட முதலீட்டு வளர்ச்சி.
5. புதிய கண்டுபிடிப்புகளுடன் இயந்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

29.ரஷ்யாவில் லெனின் பங்கு.

1. ரஷ்யாவில் போல்ஸ்விக் கட்சியின் தலைவராக லெனின் விளங்கினார்.
2. 1917 - ல் ரஷ்ய புரட்சியில் லெனின் ஏப்ரல் வாக்குறுதிகளை வழங்கினார்.
3. பிப்ரவரி புரட்சியின் போது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார்.
4. ஏப்ரல் மாதத்தில் இரஷ்யாவிற்கு வந்த லெனின் ரஷ்ய மக்களுக்கு ஏப்ரல் வாக்குறுதிகளை வழங்கினார்.

ஏப்ரல் வாக்குறுதிகள்

1. போரை முடிவுக்கு கொண்டு வருதல்.
2. நில உரிமைகளை குடியானவர்களுக்குக் கொண்டு வருதல்.
3. அனைத்து அதிகாரங்களும் சோவியத் மக்களுக்கு என முழக்கம் செய்தார்.

30.பன்னாட்டு கழகத்தின் முக்கிய உறுப்புகள்




பொதுஅவை

பன்னாட்டுக்கழகத்தில் உச்ச அதிகாரம் வகித்தன. ஒரு நாட்டுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

நிர்வாக சபை

4 நிரந்தர உறுப்பினர்கள் இருந்தனர். இதன் செயலகம் ஜெனிவாலில் இருந்தது. இதன் பொது செயலர் நிர்வாக சபையால் நியமிக்கப்பட்டார்.

JAYARAM COLLEGE

பன்னாட்டு நீதிமன்றம்

இதன் தலைமையிடம் திஹேக் ஆகும். இதில் 15 நீதிபதிகள் இருந்தனர். இதன் பணி சட்டம், உடன்படிக்கைகள் , முக்கியத் தீர்ப்புகள் இவைகளை மேற்கொண்டது.

பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

இதன் வேலை தொழிலாளர் நலனைப் பாதுகாப்பது . இதில் அரசாங்கம், தொழிலாளர், தொழில் அதிபர் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

31.இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்கள்

1. பண்டைய நாகரிகத்தின் தொட்டிலாகவும், லத்தின் மொழியின் தாயகமாகவும் இத்தாலி விளங்கியது.
2. இத்தாலியிலிருந்த செல்வமிக்க நகர அரசுகளான பிளாரன்ஸ் மற்றும் வெனிஸ் போன்றவை கலை இலக்கியத்தைப் போற்றி வளர்த்தன.
3. மிகச் சிறந்த இத்தாலியக் கலைஞரான தாந்தேவால் எழுதப்பட்ட நூலான "தெய்வீக இன்பவியல்" பிளாரன்ஸ் நகரத்தில் மறுமலர்ச்சி இயக்கம் தோன்றுவதற்கு முன்னோடியாக விளங்கியது.

32.புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்கள்

1. 1453 ஆம் ஆண்டு ஆட்டோமன் துருக்கியர்கள் கான்ஸ்டான்டி நோபிலை கைப்பற்றினர். எனவே கீழை நாடுகளுக்கு மாற்று வழிகளை கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஐரோப்பியர்களுக்கு ஏற்படுத்தியது..
2. மறுமலர்ச்சி காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட திசைகாட்டும் கருவி. கப்பல் கட்டும் கலை ஆகியவை புவியியல் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தன.
3. மார்க்கோபோலோ, நிக்கோலோ போலோ ஆகியோரின் பயணக்குறிப்புகள் கீழை நாடுகளின் செல்வ வளத்தைப் பற்றி பிரம்மிப்பை ஏற்படுத்தியது.
4. துணிச்சல் உணர்வு, ஆர்வம், போட்டா போட்டி போன்ற பிற காரணங்களாலும் புவியியல் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டன.

## *பகுதி - ஈ*

## *10. மதிப்பெண் வினா- விடை*

200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி.

**IV** 1.வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்களை தொகுத்துக் கூறுக.

இரட்டையாட்சியை ஒழித்தல்

1. ராபர்ட் கிளைவ் அறிமுகப்படுத்திய இரட்டையாட்சி முறை ஒழிக்கப்பட்டது.
2. கிழக்கிந்திய வணிகக் குழு தமது முகவர்கள் மூலம் நேரடியாக நிலவரி வசூலிக்க தீர்மானித்தது.
3. வாரன் ஹேஸ்டிங்ஸ் நவாப்பிற்கு அளித்த நிதியுதவி 32 லட்ச த்தை 16 லட்ச ரூபாயாக குறைத்தார்.
4. முகலாயப் பேரரசருக்கு வழங்கிய ஆண்டு ஓய்வு ஊதியத்தை நிறுத்தினார்.

வருவாய் சீர்திருத்தங்கள்

1. கல்கத்தாவில் ஒரு வருவாய் வாரியம் ஏற்படுத்தப்பட்டது.
2. கருவூலம் மூர்ஷிதாபாத்திலிருந்து கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டது.
3. நிலங்கள் ஓராண்டுக்குப்பதில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஏலத்திற்கு விடப்பட்டது.

நீதித்துறை சீர்திருத்தங்கள்

1. ஊழலின் உறைவிடமாக இருந்த நீதித்துறையை வாரன் ஹேஸ்டிங்ஸ் சீரமைத்தார்.
2. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட கலெக்டரின் கீழ் உரிமையியல் நீதிமன்றமும், இந்திய நீதிபதியின் கீழ் ஒரு குற்றவியல் நீதிமன்றமும் ஏற்படுத்தப்பட்டது.
3. மேலும் இரண்டு மேல்முறையீட்டு நீதிமன்றம் கல்கத்தாவில் ஏற்படுத்தப்பட்டன.

பிற சீர்திருத்தங்கள்

1. அயல் நாட்டு பொருட்கள் அனைத்துக்கும் 2.5 விழுக்காடு சுங்கவரி வசூலிக்கப்பட்டது.
2. கல்கத்தாவில் ஒரு வங்கி தோற்றுவிக்கப்பட்டது.
3. தஸ்தக்குகள் எனப்பட்ட இலவச அனுமதிச் சீட்டுகளை வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒழித்தார்.

JAIRAM COLLEGE

2.வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதை ஆய்க.

ஹைதராபாத்

1. வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டம் 1798- ல் முதன் முதலில் ஹைதராபாத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. ஹைதராபாத்தில் பிரெஞ்சுப் படைகள் முழுவதும் வெளியேற்றப்பட்டன.
3. நிசாம் பெரும் பகுதியை பிரிட்டிஷாருக்கு விட்டுக் கொடுத்தார்.
4. இப்பகுதி "கொடை மாவட்டங்கள்" எனப்பட்டது.

அயோத்தி

1. ஆப்கானிய சாமன் ஷாவின் படையெடுப்பு அச்சத்தை காரணமாககாட்டி அயோத்தி நவாப் மீது துணைப்படை ஒப்பந்தம் திணிக்கப்பட்டது.
2. இதன்படி வளமிக்க பகுதியான ரோகில் கண்ட், கீழ் தோ. ஆப் , கோரக்பூர் ஆகிய பகுதிகளை நவாப் பிரிட்டிஷாருக்கு வழங்கினார்.

தஞ்சாவூர்

1. தஞ்சையை ஆண்ட மராட்டியருக்கிடையே வாரிசுரிமைச் சிக்கல் நிலவியது.
2. 1799 - ல் அரசர் சரபோஜியுடன் வெல்லெஸ்லி உடன்படிக்கை செய்து கொண்டார்.

சூரத்

1. 1799 - ல் சூரத் நகரத்தின் நவாப் மறைந்தார். அவரது சகோதரர் ஆட்சிக்கு வந்தார்.
2. இத்தருணத்தைப் பயன்படுத்தி வெல்லெஸ்லி சூரத்தின் ஆட்சி பொறுப்பை தாமே ஏற்றார்.
3. நவாப்பிற்கு பட்டத்தைச் சூட்டிக் கொள்ளும் உரிமையும் ஆண்டுக்கு 1 லட்சரூபாய் ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

கர்நாடகம்

1. கர்நாடக நவாப்பின் வெல்லெஸ்லி ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டார். இதன்படி கர்நாடகத்தின் இராணுவம் மற்றும் சிவில் ஆட்சி முழுவதும் பிரிட்டிஷாரின் கைக்கு வந்தது.

3.பெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் தொடங்கி வைத்தார் - கருத்துக் கூறுக.

சதிமுறை ஒழிப்பு

1. கணவரின் சிதையிலேயே விதவையைத் தள்ளி கொன்றுவிடும் வழக்கம் சதி எனப்பட்டது. வங்காளத்தில் ஒரேயாண்டில் 800 நிகழ்வுகள் நடைபெற்றன. 1829 - ல் விதிமுறை 17- ன் கீழ் வில்லியம் பெண்டிங் பிரபுவால் சதி ஒழிக்கப்பட்டது.

தக்கர்களை ஒடுக்குதல்

1. தக்கர்கள் என்னும் வழிப்பறி கொள்ளையர்கள் 50 அல்லது 100 பேர் கொண்ட குழுக்களாக செயல்பட்டனர்.
2. தக்கர்கள் மாறுவேடம் அணிந்து வழிப்பறியில் ஈடுபட்டனர்.
3. மத்திய, வட இந்தியாவில் ஏற்பட்ட குழப்பத்தினால் கொள்ளையர்களின் எண்ணிக்கை அதிகரித்தது.
4. 1830 - ல் கர்னல் சிலீமேன் தக்கர்களுக்கு எதிரான நடவடிக்கையை தொடங்கினார்.
5. ஐந்தாண்டுகளில் 2000 பேர் பிடிபட்டனர்.அவர்களில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அனுப்பப்பட்டனர்.
6. இதனால் சர் வில்லியம் சீலிமேன் "தக்கீ சிலீமேன்" என்று அழைக்கப்பட்டனர்.

பெண்சிசுக் கொலை

1. மனிதநேயமற்ற இச்செயல் ராஜபுதனம், பஞ்சாப் மாளவம், கட்ச் போன்ற பகுதியில் பரவியிருந்தது.
2. பெண்சிசுக்கொலையை தடை செய்து, அதனை தண்டனைக் குரிய குற்றமாக அறிவித்தல்.

ஆங்கில கல்விமுறையை அறிமுகப்படுத்தல்

1. பெண்டிங் பிரபு மெக்காலே தலைமையில் ஒரு கல்வி குழுவை நியமித்தார்.
2. மெக்காலே பிரபுவின் பரிந்துரையை ஏற்று 1835 - ல் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் அறிவிக்கப்பட்டது.

4.1857 - ம் ஆண்டு கலகத்துக்கான காரணங்கள்

அரசியல் காரணங்கள்

1. எப்பகுதியில் பிரிட்டிஷ் அரசு காலுன்றினாலும் இந்திய மக்கள் அதை விரும்பவில்லை.
2. டல்ஹௌசியின் வாரிசு இழுப்புக் கொள்கையும் அதை அவர் நடைமுறைப்படுத்திய விதமும் இந்திய ஆட்சியாளரிடையே அச்சத்தை ஏற்படுத்தியது.

பொருளாதார காரணங்கள்

1. பிரிட்டனில் இந்திய பொருள்கள் மீது அதிக வரிகளை விதிக்கப்பட்டது.
2. இந்தியாவிற்குள் பெருமளவு பிரிட்டிஷ் பொருட்களை கொண்டு வந்து குவித்தது.
3. இந்தியக் கைத் தொழில் நலிந்ததால் ஆயிரக்கணக்கானோர் வேலையிழந்தனர்.

JAIRAM COLLEGE

4. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் பண்ணைகளை வாங்க அனுமதிக்கப்பட்டதால் இந்தியக் குடியானவர்கள் பாதிக்கப்பட்டனர்.

சமூகக் காரணங்கள்

ஆங்கிலேயரின் அகந்தை இந்திய மக்களைப் பெரிதும் பாதித்தது. மேலை நாட்டுக் கல்வியைப் புகுத்தியது.

இராணுவக்காரணங்கள்

1. இந்திய வீரர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கப்பட்டது. அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை.
2. இந்திய சிப்பாய்களின் பழக்க வழக்கங்கள் சமய உணர்வுகள், ஆங்கிலேயர்களால் மதிப்பளிக்கப்படவில்லை.

உடனடிக் காரணம்

1. புதியவகை என்பீல்டு துப்பாக்கிகள்அறிமுகம்.
2. அதில் பயன்டுத்தப்படும் தோட்டாக்களின் உறைகள் பன்றி & பசுவின் கொழுப்பிலானது.
3. ஆங்கிலேய அரசு வேண்டும் என்றே தங்களது சமய உணர்வுகளை அவமதிக்கிறது என சிப்பாய்கள் எண்ணினர்.

5.இந்திய கைத்தொழில் அழிவதற்கான காரணங்கள்

1. இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட விலை குறைவான பொருட்கள் இந்திய சந்தையில் குவிக்கப்பட்டதால் இந்தியப் பொருட்களின் விலை குறைந்தது.
2. வங்காளத்தில் பட்டு உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் விற்பனைக்கு வணிகக் குழு தடை செய்தது.
3. பருத்தித் துணி இறக்குமதி 2.5% ஆக குறைந்ததால் இங்கிலாந்து பருத்தித் துணிகள் குவிந்தன.
4. இந்தியாவில் பிரிட்டிஷ் செல்வாக்கு அதிகரித்தது. இதனால் இந்திய ஆட்சியாளர்கள் வீழ்ச்சி அடையத் தொடங்கினர்.இதனால் அவர்கள் பயன்படுத்திய அரசு உடைகள் ஆயுதங்கள் ஆடம்பரப் பொருள்களின் தேவை குறைந்தது.
5. ஐரோப்பாவில் தொழிற்புரட்சி ஏற்பட்டபோது புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இந்தியாவிலும் அவைகள் இறக்குமதி செய்யப்பட்டது. இதனால் குறைந்த நேரத்தில் அதிகளவு உற்பத்திப் பொருட்கள் ஏராளம் உற்பத்தி செய்யப்பட்டன.
6. தகவல் தொடர்பு போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டது. இதனால் இரயில் போக்குவரத்து நீராவிப்படகு, சாலைவசதி ஏற்படுத்தப்பட்டது. இதனால் இங்கிலாந்து பொருட்கள் நாடு முழுவதும் விரைவாக சென்றடைந்தன.

6.பிரிட்டிஷாருக்கு எதிராக கட்டபொம்மன் மேற் கொண்ட வீரப்போராட்டத்தை மதிப்பிடுக.

கப்பம் நிலுவையில்

1. 1792 - ல் கர்நாடக உடன்படிக்கையின்படி ஆங்கிலேயருக்கு கப்பம் வாங்கும் உரிமையை ஆர்காடு நவாப் கொடுத்தார். இதனால் பாளையக்காரர் ஆங்கிலேயருக்கு கப்பம் கட்ட வேண்டியிருந்தது. இந்நிலையில் 1798 - ல் கட்டகொம்மன் கப்பம் கட்டாமல் நிலுவையில் வைத்திருந்தார்.

ஜாக்சனின் கடிதம்

1. ஜாக்சன் மிகுந்த அகந்தையுடனும், முரட்டுத்தனத்துடனும் கட்டபொம்மனுக்கு மிரட்டல் விடுத்தார்.
2. 1798 - ல் ஆகஸ்ட் 18 -ல் தம்மை சந்திக்க இராமநாத புரத்திற்கு வருமாறு கட்டளை இட்டார்.
3. ஆனால் ஜாக்சனை சந்திக்க முடியாமல் கட்டபொம்மன் அவமானப்படுத்தப்பட்டார்.

இராமநாதபுர நிகழ்ச்சி

1. இராமநாதபுரத்தில் கலெக்டர் ஜாக்சனை சந்தித்தபோது கட்டபொம்மன் அவமானப்படுத்தப்பட்டார். அப்போது தம்பி ஊமை துரை அமைச்சர் சிவசுப்ரமணியம் தப்பிக்க முயற்சி செய்தனர்.
2. கோட்டையில் நடந்த மோதலில் சிவசுப்ரமணியம் பிள்ளை கைதுசெய்யப்பட்டார். கட்டபொம்மன் தப்பினார்.

சென்னைஅரசாங்க தலையீடு

இந்த நிகழ்வுகளை விசாரித்து கட்டபொம்மன் குற்றமற்றவர் என தீர்ப்பளிக்கப்பட்டார். இதனால் ஜாக்சன் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பாளையக்காரர் கூட்டமைப்பு

ஆங்கிலேயர் கட்டபொம்மனின் குறையைப் போக்கினாலும் அவர் தான் அடைந்த அவமானத்தை மறக்கவில்லை. எனவே பாளையக்காரர் கூட்டமைப்பைக் கூட்டினார். இறுதியாக கயத்தாறு என்னுமிடத்தில் கட்டபொம்மன் 1799 அக்டொபர் 17-ல் தூக்கிலிடப்பட்டார்.

7.1806 - ஆம் ஆண்டு வேலூர் சிப்பாய் கலகத்திற்கான காரணங்கள்

இராணுவக் கட்டுபாடு

1. சிப்பாய்கள் கண்டிப்பான ஒழுக்கம், பழக்கவழக்கம், புதிய வகை ஆயுதம் , புதிய செயல்பாடு, புதியவகை சீருடை போன்றவைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. காதணிகளை அணிவது, சமயச் சின்னங்கள் வைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டன. படைவீரர்களின் முகத்தை மழித்து மீசையை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர்.

SRIRAM COLLEGE

2. ஆங்கிலேயர்கள் இந்திய சிப்பாய்கள் தரக்குறைவாக நடத்தினர்.

இனப்பாகுபாடு

ஆங்கிலேயர்கள் இந்திய சிப்பாய்களை தரக்குறைவாக நடத்தினர். இனப்பாகுபாடு காணப்பட்டது.

நாட்டுப்பற்று

வேலூர் கலகத்திற்கு முன்பு சிப்பாய்கள் இந்திய அரசகளிடம் பணிபுரிந்த காலத்தின் போது இவர்கள் ஆங்கிலேயர்களிடம் பணிபுரிந்த போதும் தங்கள் நாட்டுப்பற்றை மறக்கவில்லை.

சிப்பாய்களின் எதிர்ப்பு

கலகத்தின் மூன்று இந்தியர்கள் தங்கள் எதிர்ப்புகளை அவ்வப்போது காட்டி வந்தனர். 1806 -மே மாதம் இந்திய சிப்பாய்கள் ஒரு புதிய விதியை எதிர்த்தனர்.ஆனால் அவர்கள் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இரகசியத் திட்டம்

1. 1806 - ல் ஜீன் 17 -ல் முதல் பிரிவைச் சேர்ந்த இராணுவ சிப்பாய்கள் முஸ்தபா பெக் என்பவர் தனது அதிகாரி கர்னல் போப்சிடம் ஒரு ரகசியத்தை கூறினார்.
2. இது என்னவெனில் ஐரோப்பிய இராணுவ அதிகாரிகளையும் படைகளையும் அழிப்பதற்கான திட்டம் தீட்டி இருப்பதே ஆகும்.

பதே ஹைதர் திட்டம்

திப்புவின் மகன் பதேஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராக மராட்டிய, பிரெஞ்ச் கூட்டணியை ஏற்படுத்தினார். மேற்கொண்ட காரணங்களால் வேலூர் கலகம் ஏற்பட்டது.

8.ரிப்பன் பிரபுவின் சீர்திருத்தங்கள்

முதல் தொழிற்சாலைச் சட்டம்

1. இச்சட்டம் 7 வயது குழந்தைகளைத் தொழிற்சாலைகளில் பணிபுரிய தடை விதித்தது.
2. பெண்களின் வேலை நேரத்தைக் குறைத்தது.
3. அபாயகரமான இயந்திரங்களைச் சுற்றி கம்பி வேலியிடப்பட்டது.

தலசுய ஆட்சியை அறிமுகப்படுத்தல்

1. நகரங்களில் நகரச் சபை குழுக்கள், கிராமங்களில் உள்ளாட்சி நிறுவனங்களைப் போற்றுதல்.
2. உள்ளாட்சி கழகங்களுக்கு தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றனர்.
3. தலசுய ஆட்சியே ரிப்பனின் மகத்தான சாதனை.

கல்விக் சீர்திருத்தங்கள்

1882- ல் ஹண்டர் கல்விப் குழு - தொடக்கக்கல்வி மேம்படுத்தல், இரண்டுக் கோணங்களில் இடைநிலைக் கல்வி. தொழிற்கல்வி & பெண்கல்விக்கு முக்கியத்துவம்அளிக்கப்பட்டது

இல்பர்ட் மசோதா

1. ஐரோப்பியர் குறித்த வழக்குகளை இந்திய நீதிபதிகள் விசாரிக்கக் கூடாது என்னும் நிலை இந்தியர்களுக்கு அவமானமாக இருந்தது.
2. ஐரோப்பியர் **C.B** .இல்பர்ட் ஒரு மசோதாவை அறிமுகப்படுத்தினர்.
3. இம்மசோதா குறித்த சர்ச்சை இந்திய தேசியம் வளர வழிவகுத்தது.

9.இந்தியாவில் தேசியம் தோன்றுவதற்கான காரணங்கள்.

அரசியல் ஒற்றுமை

1. இந்தியவின் பல்வேறு பகுதிகளும் அரசியல் மற்றும் ஆட்சியடிப்படையில் ஒரே குடையின் கீழ் முறையாக கொண்டுவரப்பட்டது.
2. இரயில் பாதைகள் , தந்தி, அஞ்சல் சேவைகள் சாலை போக்குவரத்து போன்ற போக்குவரத்து மேம்பாடு மக்களை ஒன்றிணைத்தன.

ஆங்கில மொழியும் மேலை நாட்டுக் கல்வியும்

1. பல்வேறு மொழிகளை பேசும் இந்தியருக்கு ஆங்கிலம் இணைப்பு மொழியானது.
2. சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் போன்ற கொள்கைகளை மேலை நாட்டு கல்வி இந்தியர்களிடையே பரப்பியது.

பிரிட்டிஷாரின் பொருளாதார சுரண்டல்

1. இந்திய வணிகத்தையும், கைத்தொழிலையும் பிரிட்டிஷ் கொள்கைஅழித்தது.
2. பிரிட்டிஷாரின் பொருளாதார கொள்கை மக்களிடையே எதிர்ப்பை வளர்த்தது.

JAIRAM COLLEGE

லிட்டனது நிர்வாகம்

1. இந்தியர்கள் பஞ்சத்தில் துவண்டுகிடந்த போது லிட்டனது டெல்லி தர்பார் நடைபெற்றது.
2. லிட்டனின் ஆயுதச் சட்டம் இந்தியர்களின் எதிர்ப்பை உருவாக்கியது.
3. நாட்டுமொழி செய்தித்தாள் சட்டம் பத்திரிக்கை சுதந்திரத்தை நசுக்கியது.

இல்பர்ட் மசோதா சர்ச்சை

ஐரோப்பிய() இந்திய நீதிபதிகளுக்கிடையிலான வேறுபாட்டை களைய இல்பர்ட் மசோதா அறிமுகம் இத்தகைய காரணங்களால் இந்தியாவில் தேசியம் தோன்றியது.

10.இந்திய விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தியின் பங்கு

1.காந்தியின் ஆரம்பகால போராட்டங்கள்

1. இந்திய தேசிய இயக்கத்தின் மூன்றாம் நிலை(1917 - 1947) இவரது கொள்கை
2. அகிம்சை மற்றும் சத்தியாகிரகம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக செயல்படுத்தப்பட்டன. 1917 ஆம் ஆண்டு சத்தியாகிரக போராட்டத்தில் முதன் முதலாக அறப்போர் முறையை இந்திய மண்ணில் பரிசோதித்துப் பார்த்தார்.

2.ரௌலட் சட்டம் (1919)

1. இச்சட்டத்தின்படி ஆங்கில அரசு சந்தேகத்தின் பேரில் எவரையும் கைது செய்யலாம். இதை எதிர்த்துமேல் முறையீடு செய்ய முடியாது.இதனால் இச்சட்டம் "கருப்பு சட்டம்" என அழைக்கப்பட்டது. இச்சட்டத்திற்கு பலத்த எதிர்ப்பும் மறியல் போராட்டமும் நடத்தப்பட்டன. மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டார்.

3.ஜாலியன் வாலாபாக் படுகொலை(1919)

இப்படு கொலை இந்திய விடுதலை இயக்கத்திற்கு ஒரு முக்கிய திருப்புமுனையாகும். ஜெனரல் டயர் பொதுக் கூட்டங்களுக்கு தடை விதித்தார்.துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 379 பேர் கொல்லப்பட்டனர்.

4.ஒத்துழையாமை இயக்கம்(1920-22)

1920 - ஆம் ஆண்டு காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்தார்.இதன் மூலம் பிரிட்டிஷ் அரசு கொடுத்த பட்டங்களைத் துறத்தல், சட்ட மன்றங்களை புறக்கணித்தல், மாணவர்கள் பள்ளிகள் விட்டு வெளியேறுதல் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றன.

5.தண்டியாத்திரை(1930)

காந்தி இரண்டாவது கட்ட போராட்டமாக தனது புகழ் பெற்ற தண்டியாத்திரையைத் தொடங்கினார்.79 சீடர்கள் பின் தொடர்ந்து உப்பு சட்டத்தை மீறுவதற்காக புறப்பட்டனர். மாணவர்கள், தொழிலாளர்கள், குடியானவர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த இயக்கத்தில் பங்கேற்றனர்.

6.வெள்ளையனே வெளியேறு இயக்கம்(1942 - 44)

இப்போராட்டத்தின் போது காந்தி "செய் அல்லது செத்துமடி" என்ற அரை கூவலை விடுத்தார். பூனா சிறையில் அடைக்கப்பட்டார்.மாணவர்கள் பள்ளிகளையும், கல்லூரிகளையும் விட்டு வெளியேறி இந்த இயக்கத்தில் பங்கேற்றனர். வெள்ளையனே வெளியேறு இயக்கம் நாட்டின் உச்சக் கட்ட போராட்டமாகும்.

11.நீதிக்கட்சியின் சாதனைகள்

1. கட்டணமில்லாத கட்டாய கல்வி முதன் முறையாக சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. சென்னையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநகராட்சி பள்ளிகளில் இலவச மதிய உணவு அளிக்கப்பட்டது.
3. பெண்கல்வி நீதிக் கட்சியின் ஆட்சியில் உருவாக்கப்பட்டது.
4. ஆயுர்வேதா, சித்தா, யுனானி மருத்துக் கல்விக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.
5. பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.
6. இந்தியாவிலேயே முதன்முதலாக பணியாளர் தேர்வு ஆணையம் சென்னையில் ஏற்படுத்தப்பட்டது.
7. சமுதாய நல நடவடிக்கைகளாக நீதிக்கட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தரிசு நிலங்கள் வழங்கியது.
8. பெண்களை இழிபடுத்தும் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
9. நீதிக்கட்சி ஆட்சியின் போது தான் 1926- ல் ஆந்திரப் பல்கலைக் கழகம், 1929 - ல் அண்ணாமலை பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டன.
10. 1921 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் கொண்டு வரப்பட்டது ஆலய நிர்வாகங்களில் நிலவிய ஊழலை ஒழிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
11. தொழிற்சாலைகள் வளர்ச்சிக்காக 1922- ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் தொழிற்சாலைகள் உதவிச்சட்டம் கொண்டுவரப்பட்டது.இது பல புதிய தொழிகள் உருவாக காரணமாயிருந்தன.
12. ஏறத்தாழ 3000 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர் சிறுமியருக்கு மீன்வளத்துறையின் மூலமாக இலவச மீன்பிடிப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.
13. 1934 ஆம் ஆண்டு சென்னை துவக்க கல்வி சட்டம் திருத்தப்பட்டு 1935 - ல் துவக்கக் கல்வியின் தரம் மேம்படுத்தப்பட்டது.
14. 1921 மற்றும் 1922 ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட இட ஒதுக்கீடு
15. அரசாணைகள் , உள்ளாட்சி அமைப்புகளிலும் கல்வி நிறுவனங்களிலும் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீட்டுக்கு வழிவகுத்தது.

JAIRAM COLLEGE

12.சுதந்திர இந்தியாவின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி

1. 1947 க்குபின் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பத்தின் முக்கிய தேவையை பிரதமர் நேரு நன்கு உணர்ந்திருந்தார்.
2. இந்தியாவின் முதலாவது தேசிய ஆய்வு கூடமாகிய "தேசிய இயற்பியல் ஆய்வுக் கூடம் " நிறுவப்பட்டது.
3. பின்னர் சென்னை, பம்பாய், கான்பூர், டெல்லி ஆகிய இடங்களிலும் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்பட்டன.

அணுசக்தி

1. 1948 ஆகஸ்டில் அணுசக்தி ஆணையம் ஹோமி.ஜே.பாபா என்பவர் தலைமையில் நிறுவப்பட்டது.
2. 1956- ல் இந்தியாவில் முதலாவது அணுசக்தி நிலையம் பம்பாய்க்கு அருகில் உள்ள டிராம்போவில் அமைக்கப்பட்டது. மேலும் தமிழ்நாட்டில் கல்பாக்கத்தில் உள்ள இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி மையம் சென்னையில் உள்ள உயர் தொழில் நுட்ப மையம் என்பனவாகும்.

விண்வெளி ஆய்வு

1. 1962- ல் விண்வெளி ஆராய்ச்சிக்கான இந்திய தேசிய குழுமம் அமைக்கப்பட்டது. தும்பாவில் ராக்கெட் ஏவுதளம் ஒன்றும் உருவாக்கப்பட்டது.
2. தொலைத் தொடர்பு வானியல் கோள் ஆய்வுக்கான தேவையை நிறைவேற்ற இன்சாட்1, 1A மற்றும், 1B ஆகிய விண்வெளி ஓடங்கள் நிலவி வருகிறது.
3. இஸ்ரோ எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு அமைப்பு விண்வெளி ஆராய்ச்சி தொழில்நுட்பம் போன்றவை நிறைவேற்றுகிறது. இஸ்ரோ மையங்களில் மிகப்பெரிய திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம்சாராபாய்
4. விண்வெளி மையம்..
5. விண்வெளி ஓட தொழில்நுட்பத்தை பெங்களூரில் உள்ள இஸ்ரோ மையம் பெற்றுள்ளது.
6. ஆந்திரபிரதேசத்தில் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள ராக்கெட் ஏவுதளம் இஸ்ரோவின் முக்கிய ஏவுதளமாகும்.மேலும் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் மகேந்திரகிரியில் ராக்கெட் எஞ்சின் தயாரிக்கப்படுகிறது.

13.ஜவஹர்லால் நேரு "நவீன இந்தியாவின் சிற்பி"

இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவஹர்லால் நேரு அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் . திட்டமிட்ட பொளாதார வளர்ச்சிக்கும் வித்திட்டார். மேலும் சுதந்திரமான அயலுறவுக் கொள்கையை பின்பற்றினார்.

திடடமிட்ட பொருளாதார வளர்ச்சி

1. இந்தியாவின் சிற்பி ஜவஹர்லால் நேரு. சோவியத் நாட்டின் திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையை பின்பற்றினார். மேலும் சமத்துவத்தையும் இணைந்து "ஜனநாயக சமத்துவம்" என்ற கொள்கையை வளர்த்தார்.
2. கனரக தொழில்களை வளர்ப்பதற்கு பொதுத்துறை நிறுவனங்களை நிறுவினார். 1950 -ம் ஆண்டு தேசிய திட்டக்குழுவை ஏற்படுத்தி அதன் தலைவராகவும் விளங்கினார்.

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி

1. இந்தியாவின் முதலாவது தேசிய ஆய்வுக் கூடமாகிய "தேசிய இயற்பியல் ஆய்வுக் கூடம் " நிறுவப்பட்டது.
2. 1948 - ல் அணுசக்தி ஆணையம் ஹோமி.ஜே. பாபா தலைமையில் நிறுவப்பட்டது. 1962 -ல் விண்வெளி ஆராய்ச்சிக்கான இந்திய தேசிய குழுமம் அமைக்கப்பட்டது.

அயலுறவுக் கொள்கை

1947 முதல் சுதந்திரமான அயலுறவுக் கொள்கையை பின்பற்றினார். அணிசேரா இயக்கத்தை வடிவமைத்தார். குடியேற்ற நாடுகளின் ஆதரவை நல்கினார். பஞ்சசீலக் கொள்கையை வெளியிட்டார்.

பன்னாட்டு அமைப்புகளில் நேருவின் பங்கு

காமன்வெல்த் ,ஐக்கிய நாடுகள்சபை போன்ற பன்னாட்டு அமைப்புகளிலும் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது.

14.மறுமலர்ச்சி கால அறிவியல் வளர்ச்சி

மறுமலர்ச்சியுடன் இணைந்து அறிவியல் உணர்வும் இக்காலத்தில் வெளிப்பட்டது.

1. பிரான்சிஸ்பேகன் - நவீன அறிவியலின் தந்தை என கருதப்படுகிறார்.
2. டெக்கார்த்தே - எதனையும் சோதித்து அறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.
3. கோப்பர்நிக்ஸ் - சூரியனே பிரஞ்சத்தின் மையம் என்ற கருத்தை முன் வைத்தார். கோள்கள் யாவும் சூரியனை மையமாக கொண்டே வலம் வருகின்றன என்ற உண்மையை உறுதிப்படுத்தினார்.
4. புதிய வான இயல் அறிவினை அடிப்படையாகக் கொண்டு போப் 13 - ம் கிரிகோரி 1582- ம் பழைய நாட்காட்டியை திருத்தி அமைத்தார்.
5. தொலைநோக்கியை கலிலியோ கண்டறிந்து கோபர்நிக்சன் கோட்பாடுகளை உறுதிப்படுத்தினார்.
6. வில்லியம் ஹரீவி இரத்த ஓட்டத்தை கண்டறிந்து மருத்துவ துறைக்கு மேலும் வலு சேர்த்தார்.
7. ஹெல்மான்ட் என்பவர் கரியமில வாயுவைக் கண்டறிந்தார்.
8. பாராசெல்சஸ் என்பவர் மனித உடலில் ஏற்படும் மாற்றங்களுக்கு வேதியியல் மாற்றங்களே காரணம் என்று கூறினார்.

வெசாலியஸ் என்பவர் மனித உடற்கூறுகள் பற்றிய ஒரு விளக்க நூலை எழுதினார்.

JAIRAM COLLEGE

15. பன்னாட்டு கழகத்தின் தோல்விக்கான காரணங்கள்
1. அமெரிக்கா, சோவியத்ரஷ்யா, போன்ற நாடுகள் உறுப்பினராக இல்லை.
2. பன்னாட்டுக் கழகத்தின் சட்ட ஆவணம் அமைதி ஏற்பாட்டின் ஒரு பகுதியாகவே இருந்தது.
3. ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் கலகத்தை விட்டு வெளியேறின.
4. முதல் உலகப் போரில் வெற்றி பெற்ற நாடுகள் குறிப்பாக இங்கிலாந்து . பிரான்ஸ் ஆகிய நாடுகள் கலகத்தில் ஆதிக்கம் செலுத்தின. மேலும் ஜெர்மனி போன்ற நாடுகளை இவர்கள் அவமானப்படுத்தினர்.
5. ஜப்பான் மஞ்சூரியாவை கைப்பற்றியது. இச்செயலை கழகம் கண்டிக்கவில்லை.
6. இத்தாலியில் முசோலினியால் தோற்றுவிக்கப்பட்ட பாசிசக்கட்சி அபிசீனியாவை கைப்பற்றியது. இதனைத் தட்டிக் கேட்ட வழக்கிலிருந்து இத்தாலி வெளியேறியது.
7. முதல் உலகப் போருக்கு பின் இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளில் சர்வதிகார ஆட்சிகள் எழுச்சி பெற்றன.
8. பன்னாட்டு கலகத்திற்கு மற்ற நாடுகளின் ஆக்கிரமிப்புகளை தட்டிக் கேட்கும் திறன் இல்லை என்பது வெளிப்படையாக தெரிய வந்தது.

16.உலகளாவிய பயங்கரவாதத்தின் தாக்கத்தை மதிப்பிடுக.
1. பயங்கரவாதக் குழுவினரால் பெரும்பாலும் நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது அரசியல் காரணத்திற்காக திட்டமிட்டு நடத்தப்படுகின்ற வன்முறை தாக்குதலே பயங்கரவாதம் எனப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளை சேர்ந்தவர்கள் இத்தகைய செயலில் ஈடுபட்டிருந்தால் அது பன்னாட்டு பயங்கரவாதம் என்று கருதப்படுகிறது.
2. 2001 செப்டம்பர் 11 ஆம் நாள் அமெரிக்காவின் நியுயார்க் நகரிலிருந்த உலக வர்த்தக மையத்தின் இரட்டை கோபுரங்கள் தாக்கப்பட்டது. இதில் 2973 பேர் கொல்லப்பட்டனர்.
3. 1980 முதல் இந்தியாவிலும் பயங்கரவாத வன்முறைகளை சந்தித்து வருகிறது. ஜம்மு காஷ்மீரில் மட்டும் துப்பாக்கி சூடு மற்றும் வெடிகுண்டுகளால் 20 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர்.
4. 1992 பம்பாய் குண்டுவெடிப்பு, 1996 டெல்லி லாஸ்ட் குண்டு வெடிப்பு, இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் காண்டகாருக்குக் கடத்தல். 178 பயணிகளும் ஒருவாரம் பிணைகைதிகளாக வைக்கப்பட்டிருந்தனர்.
5. 2001 - டிசம்பர் 13 ம் நாள் இந்திய நாடாளுமன்றத்தின் மீதே பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தியா ஐ.நா. அமைப்புடன் சேர்ந்து பயங்கரவாதத்தை கண்டித்து வருகிறது.

17.ஜெர்மனியில் சமய சீர்திருத்த இயக்கமும் - மார்டின் லூதரும்
மார்டின் லூதரின் இளமை வாழ்க்கை
1. 1483 நவ 10 - ல் அய்ல்பென்னில் பிறந்தார்.
2. 1508 - ல் சமயத் துறவியானார்.
3. 1510- ல் ரோமாபுரிக்கு சென்ற போது குருமார்களின் சுக போக வாழ்க்கையை கண்டார்.
4. திருச்சபையின் தீமைகளுக்கு எதிரான பிரசாரம்.

பாவமன்னிப்பு சீட்டு விற்பனை
1. 1517 -ல் ரோமாபுரி புனித பீட்டர் தேவாலயம் புதுப்பிப்பு.
2. பாவ மன்னிப்பு சீட்டு விற்பனையை மார்டின் லூதர் எதிர்த்தார்.
3. போப் பத்தாம் லியோ, ஜான் டெட்சலை பாவமன்னிப்பு சீட்டு விற்க ஜெர்மனிக்கு அனுப்பினார்.

லூதர் மதவிலக்கம் செய்யப்படல்
1. பாவமன்னிப்பு சீட்டு விற்பனைக்கு எதிராக லூதர் 95 குற்றங்களை விட்டன்பர்க் பல்கலை கழகத்தின் தேவாலய கதவுகளில் ஆணிகள் கொண்டு அறைந்தார்.
2. எனவே போப், பத்தாம் லியோ அவரை1521-ல் மதவிலக்கம் செய்தார்
3. அந்த ஆணையை லூதர் மக்கள் முன் தீயிட்டுக் கொளுத்தினர்.

ஐந்தாம் சார்லஸ் நடவடிக்கை
1. போப் பத்தாம் லியோவின் வேண்டுகோள்.
2. புனித ரோமானிய பேரரசர் ஐந்தாம் சார்லஸ் லூதரை 1521 -ல் குற்றவாளியாக அறிவித்தல்.
3. ஆனால் லூதரை ஜெர்மானிய சிற்றரசர்கள் ஆதரித்தனர்.

வார்ட்பர்க் கோட்டையில் லூதரின் பணி
1. லூதரை கைது செய்யும் முன் அவர் இக்கோட்டையில் தனது நண்பர்களால் பாதுகாப்பாக வைக்கப்பட்டார்.
2. 1529 - ல் சிறு வினா - விடை நூலை வெளியிட்டார்.
3. 1546 - ல் தனியாக வாழ்ந்து இறந்தார்.
4. புதிய ஏற்பாடு ஜெர்மானிய மொழியில் மொழிப்பெயர்த்தார்.

18.1789 -ல் பிரெஞ்சு புரட்சிக்கான காரணங்கள்
அரசியல் காரணங்கள்
1. பிரான்சை பூர்போர்ன் வம்சம் ஆட்சி செய்தது.
2. 14- ம் லூயி தொடர்ந்து போர்கள் மூலம் பிரெஞ்சு பொருளாதாரத்தை சீர்குலைத்தன.
3. 15-ம் லூயி 16 -ம் லூயி திறமையற்றவர்கள்.
4. 16-ம் லூயி ஆட்சிகாலத்தில் அவரது அரசி மேரி அண்டாயினட் நிர்வாகத்தில் தலையிட்டார்.

JAIRAM COLLEGE

சமூகக் காரணங்கள்

1. பிரெஞ்சு சமுதாயம் மூன்று பிரிவுகளாக பிரிந்து கிடந்தது.
2. உயர் குடியினர் & குருமார்கள் வரிவிலக்கு பெற்றிருந்தனர்.
3. பிரபுக்கள் சண்டையிடுவர், குருமார்கள் தொழுவர், மக்கள் அனைத்து வரிகளையும் செலுத்துவர் என்பது பிரான்சின் பொதுவான வழக்கமாக இருந்தது.

பொருளாதார காரணங்கள்

1. 16-ம் லூயி ஆட்சி காலத்தில் நாட்டுக் கடன் எல்லை மீறி சென்றது.
2. 1789 - ல் ஸ்டேட் ஜெனரல் (பாராளுமன்றம்) கூட்டப்பட்டது.
3. டர்காட்,ஜேக்கள் நைக்கர் போன்ற நிதித்துறை வல்லுநர்கள் செலவைக் குறைத்து வருவாயை பெருக்க முற்பட்டனர்.உயர்குடியினர் இதை ஏற்கவில்லை.

பிரெஞ்சு சிந்தனையாளர்கள்

1. பிரெஞ்சு சிந்தனையாளர்கள் - மான்டெஸ்கியூ , வால்பேர் ரூசோ.
2. வால்டேர் = மூட பழக்கவழக்கங்களை சாடினார். வரம்புக்குட்பட்ட முடியாட்சியை ஆதரித்தார்.
3. ரூசோ - சமுதாய ஒப்பந்தம் அரசின் உண்மையான அதிகாரம் மக்களிடையே உள்ளது என்றார்.
4. மான்டெஸ்கியூ - சட்டத்தின் சாரம் , மக்களாட்சி செம்மையாக நடைபெற அதிகாரங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட வேண்டும் என்றார்.

ஸ்டேட் ஜெனரல் கூட்டப்படுதல்

பிரெஞ்சு கருவூலம் காலியானதால் ஸ்டேட் ஜெனரலை கூட்ட வேண்டிய கட்டாயம் 16-ம் லூயிருக்கு ஏற்பட்டது. இதுவே பிரெஞ்சு புரட்சிக்கு வித்திட்டது.

19.முதல் உலகப் போருக்கான காரணங்கள்

இரகசிய உடன்படிக்கை

1. 1914 - ம் ஆண்டுக்கு முன்பு ஐரோப்பா இரு அணிகளாக காணப்பட்டது.
2. ஜெர்மனி - ஆஸ்திரியா - இத்தாலி 1882 - ல் முக்கூட்டு உடன்படிக்கை ஏற்பட்டது.
3. இங்கிலாந்து, பிரான்ஸ் , ரஷ்யா மூவர் நட்புறவு 1907 -ல் ஏற்பட்டது.

இராணுவ குவிப்பு

1. பயம், வெறுப்பு, சந்தேகம் போன்றவை ஐரோப்பாவில் ஆயுத குவிப்புக்கு காரணமாயின.
2. ஜெர்மனியின் ஒரு கப்பலுக்கு இங்கிலாந்து இரு கப்பலை கட்டியது.
3. இங்கிலாந்தும் ஜெர்மனியும் தங்களின் படை வலிமையை பெருக்கிக் கொண்டன.

குறுகிய நாட்டுப் பற்று

1. ஒரு நாட்டின் மீது பற்று என்பது அடுத்த நாட்டின் மீது வெறுப்பு
2. ஜெர்மனியை நேசிக்க வேண்டுமானால் பிரான்சை வெறுக்க வேண்டும்.
3. கிழக்கு ஐரோப்பாவில் குறுகிய நாட்டுப்பற்று தீவிரமாக பின்பற்றப்பட்டது.

அல்சேஸ் - லொரேன் பிரச்சினை

1871 - ல் பிராங்கோ பிரஷ்ய போரில் இரும்பு தாது வளப் பகுதிகளான அல்சேஸ் - லொரேன் பகுதிகளை பிரான்சு இழந்தது. இவற்றை திரும்பபெற பிரான்சு தக்க தருணம் பார்த்து காத்து கொண்டிருந்தது.

வில்லியமின் பேராசை

1. ஜெர்மனியை வலிமை மிக்க நாடாக்க விரும்பினார்.
2. பிரிட்டனின் வலிமை குறித்த அவரது தவறான கருத்து முதல் உலகப் போருக்கான காரணமானது.
3. பன்னாட்டு விவகாரங்களில் எந்தவொரு சமரசத்தையும் அவர் ஏற்க தயாராக இல்லை.

உடனடிக் காரணம்

1. ஆஸ்திரிய இளவரசர் "பெர்டிணான்ட்" படுகொலை முதல் உலகப் போர் ஏற்பட உடனடிக் காரணமாகும்.
2. இப்படுகொலை செர்பிய இளைஞன் ஒருவனால் செய்யப்பட்டது.
3. ஆஸ்திரிய - ஹங்கேரி இதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள நினைத்தது.

20. இரண்டாம் உலகப் போருக்கான காரணங்கள்

வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1. இது ஒரு அவமானகர உடன்படிக்கை.
2. ஜெர்மனியின் நில பகுதியும், இராணுவ வலிமையும் பெரிதும் குறைக்கப்பட்டது.
3. இதற்கு ஜெர்மன் பழிவாங்க துடித்தது.

JAIRAM COLLEGE

சர்வாதிகார எழுச்சி
1. ஐரோப்பாவில் ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், ஆசியாவில் ஐப்பான் ஆகிய நாடுகளில் சர்வாதிகாரம் வேரூன்றியது.
2. 1937- ல் ரோம் - பேர்லின் - டோக்கியோ அச்சு உலக அமைதிக்கு கெடு விளைவித்தது.
3. முறையே ஹிட்லர், முசோலினி & பிராங்கோ ஐரோப்பாவில் சர்வதிகார ஆட்சியை நிறுவினார்.

இராணுவ மயமாக்கல்
1. 1919 - ல் பாரிஸ் அமைதி மாநாட்டில் கூறப்பட்டது போல் நேச நாடுகளின் படைவலிமையை குறைக்குமாறு ஹிட்லர் கோரினார்.
2. நேச நாடுகள் மறுக்கவே, ஹிட்லரும் தனது படை வலிமையை பெருக்கினார்.
3. அதிகளவு ஆயுத உற்பத்தி & இராணுவ மயமாக்கல் இரண்டாம் உலகப் போருக்கு வித்திட்டன.

பேரரசுக் கொள்கை
1. ஜெர்மனி, இத்தாலி, ஐப்பான் - பேரரசு கொள்கையை பின்பற்றின.
2. மஞ்சூரியாவை, ஐப்பானும், அபீசினியாவை, இத்தாலியும் ஆக்கிரமித்தல்.
3. ஹிட்லர் - ரைன்லாந்து,ஆஸ்திரியா,மெமல், செக்கோஸ்லாவாகியா போன்றவற்றை இணைத்துக் கொண்டார்.

பன்னாட்டு கலகத்தின் தோல்வி
1. உலக அமைதிக்காக்கவும், பிரச்சினைகளை சுமூகமாக தீர்க்கவும் பன்னாட்டு கழகம் தோற்றுவிக்கப்பட்டது.
2. ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட நாடுகளை பன்னாட்டு கழகத்தினால் தட்டிகேட்க இயலவில்லை.
3. இதன் கோட்பாடுகளை அதன் உறுப்பு நாடுகள் ஏற்கவில்லை.

உடனடிக்காரணம்
1. கிழக்கு ரஷ்யா ஜெர்மனியிடம் இருந்து பிரிக்கப்பட்டது.
2. ஹிட்லர் இதனை இணைக்க விரும்பினார்.
3. 1939 செப் 1 -ல் ஹிட்லர் போலந்தைத் தாக்கினர்.
4. 1939 செப் 1 - ல் ஹிட்லர் ஜெர்மனி மீது போர் அறிவித்தது.
5. இவ்வாறாக இரண்டாம் உலகப் போர் தோன்றியது.

21. உலக அமைதியினை காப்பதில் ஐ.நா.வின் பங்கு (அல்லது) ஐ.நா.வின் சாதனைகள்

ஈரான் சிக்கல்
1. ஈரானியப் பகுதியில் இரஷ்யத் துருப்புகள், ஐ.நா.அவையின் கடுமையான எச்சரிக்கை, இரஷ்யா தனது துருப்புகளை விலக்கி கொளல்.

சிரியா & லெபனான்
1. சிரியா & லெபனானில் பிரிட்டிஷ் & பிரெஞ்சு துருப்புக்கள் ஆக்கிரமித்திருந்தன.
2. ஐ.நா.வின் பாதுகாப்பு சபையின் தீவிர முயற்சி பிரிட்டிஷ்&பிரெஞ்சு துருப்புக்களை சிரியா & எலபனானில் இருந்து வெளியேற்றியது.

இந்தோனேசியா
1. இந்தோனேசியா டச்சு குடியேற்றமாக இருந்தது.
2. இந்தோனேசியா தேசியவாதிகள் ஒரு குடியரசை நிறுவினார்.
3. டச்சு இதை ஏற்க மறுத்து.
4. ஐ.நா. வின் தலையிட்டால் இந்தோனேசியா விடுதலையடைந்தது.

பாலஸ்தீன சிக்கல்
1. மேன்டேட்டரி முறையில் பாலஸ்தீனம் பிரிட்டனிடம் விடப்பட்டது.
2. இங்கு யூதர்களுக்கும் , அரேபியர்களுக்கும் பூசல்கள் எழுந்தது.
3. நீண்ட ஒரு போராட்டத்திற்கு பின் ஐ.நா.வின் தீவிர முயற்சி பாலஸ்தீன தனி நாட்டை அரசியல் ரீதியாக சுதந்திரமாக்கியது.

காஷ்மீரிய சிக்கல்
1. இது இந்தியா (&) பாகிஸ்தானுக்கு இடையே நிலவுகிறது.
2. இதற்கு தீர்வுகளை காண ஐ.நா முயற்சி மேற் கொண்டு வருகிறது.

பிற முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு
1. சூயஸ் கால்வாய் சிக்கல் 1956, சைப்ரஸ் பிரச்சினை 1960 , காங்கேலி சிக்கல் 1960, வளைகுடாப் போர் 1990 போன்ற பிரச்சினைகளுக்கு ஐ.நா. வெற்றிகரமான தீர்வு கண்டது.

JAIRAM COLLEGE

காலக்கோடு - இந்திய தேசிய இயக்கம் 1900 - 1950
முக்கிய நிகழ்வுகள் 1900 - 1920
1905 - வங்கப்பிரிவினை, 1906- முஸ்லீம் லீக் தோற்றம், 1907 - சூரத் மாநாடு, 1916 - தன்னாட்சி இயக்கம்,
1919 - ஜாலியன் வாலாபாக் படுகொலை, 1920 - ஒத்துழையாமை இயக்கம்

மிகவும் முக்கிய நிகழ்வுகள் 1920- 1950
1920 - ஒத்துழையாமை இயக்கம், 1922- சௌரிசௌரா நிகழ்ச்சி, 1927 - சைமன் குழு வருகை,
1930 - சட்ட மறுப்பு இயக்கம் தண்டி உப்பு அறப்போர், 1940 - தனிநபர் அறப்போர், 1947 - இந்தியா சுதந்திரம் அடைதல், 1950 - இந்தியா குடியரசு ஆதல்

------முற்றும்----

JAIRAM COLLEGE